பக்கங்கள்: 12
விலை : 30/-
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 17 புதன்கிழமை 01.07.2020 கதிர் 238

இது ரகசியம் அல்ல!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் பத்திரிகைகளின் ஆசிரியர்களை இன்று காலை போசனத்துடன் சந்திக்கின்றார்.

இது தேர்தல் காலம். தேர்தலை ஒட்டிய பல 'குண்டுகளை' அவர் கொளுத்திப் போடுவார் என எதிர்பார்க்கலாம்.

பக்கம் 02

# அரச, தனியார் அலுவலகங்களின் புதிய நேர அட்டவணை பரிந்துரை

கொழும்பு, ஜூலை 01

கொரோனாவைரஸ்தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் சமூக இடைவெளியைப் பராமரித்தல், போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பது மற்றும் பொது மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளின் செயல்திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் தனியார் மற்றும் அரச அலுவலகங்களின் ஆரம்பம் மற்றும் நிறைவு நேரங்களில் மாற்றம் செய்வது தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

பக்கம் 02

# இலங்கையுடன் இந்தியா பேச்சு

கொழும்பு, ஜூலை 01

கடன் நிவாரணங்கள் மற்றும் நாணய பரிமாற்றல் ஒப்பந்தங்கள் குறித்து இலங்கையுடன் இந்தியா உயர்மட்ட பேச்சு நடத்தியுள்ளது.

நிதி விவகாரங்கள் தொடர்பான இந்திய- இலங்கை பேச்சுக்கள் தொடர்பாக ஊடக மொன்று

பக்கம் 02

# ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை நிலை பற்றி கவலை



ஜெனிவா, ஜூலை 01

இலங்கையில் காணப்படும் நிலவரம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார் கவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை

பக்கம் 02

# ராணுவத்தினரிடம் கையளித்த உறவுகளுக்கு நடந்தது என்ன?

சபா.குகதாஸ் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 01

இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

சபா.குகதாஸ் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில்

பக்கம் 02

# தீவிரவாதிகளற்ற நாடாளுமன்றம் உருவாக்கப்படும்

## கெஹெலிய ரம்புக்வெல நம்பிக்கை



கொழும்பு, ஜூன் 01

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தீவிரவாதிகள் இல்லாத நாடாளுமன்றம் உருவாக்கப்படும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பக்கம் 02

# 1,227 நாளையும் தாண்டியது கிளிநொச்சிப் போராட்டம்



கிளிநொச்சி, ஜூலை 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் 1227 நாளை தாண்டிய நிலையில் நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் கிளிநொச்சி ஏ-9 வீதியில்

பக்கம் 02

இலங்கையில் வீழ்ச்சியுற்ற

# சுற்றுலாத்துறையை மீட்க நாணய நிதியம் உதவுகிறது

கொழும்பு, ஜூலை 01

கொவிட் – 19 தொற்று காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக சர்வதேச

பக்கம் 02

# அம்மானுக்கு ஆப்பு!

## அரந்தலாவை கொலைச் சம்பவத்தில் தப்பிய பிக்கு உயர்நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, ஜூலை 01

அரந்தலாவைப் பகுதியில் 33 பௌத்த பிக்குகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பௌத்த பிக்கு ஒருவரே மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தாக்குதலில் ஈடுபட்டு தற்போது எஞ்சியுள்ள

பக்கம் 02




# காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் நேற்றுப் போராட்டம்!





வவுனியா, ஜூலை 01

இலங்கையைச் சர்வதேச நீதிமன்றிடம் பாரப்படுத்தக் கோரி வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஒன்றிணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

சர்வதேசமே

பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுவும் தமிழ்ப் பத்திரிகையாளர்களைச் சந்திக்கின்றமையால் தமிழர் அரசியல் குறித்துப் பல விடயங்கள் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

குறிப்பாகத் தென்னிலங்கையில் பெரும் அதிர்வு அலைகளை ஏற்படுத்தியிருக்கும் கருணா விடயம், தமிழ்க் கூட்டமைப்பின் போக்கு, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், விக்னேஸ்வரன் – கஜேந்திரகுமார் தரப்புகளின் தீவிர நிலைப்பாடு போன்றவை குறித்து பல அதிர்வேட்டுகள் பிரமரிடம் இருந்து வரும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

நேற்று சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் அதன் யாழ்.மாவட்ட வேட்பாளரும் முன்னாள் எம்.பியுமான சிறீதரன் புதிய குண்டு ஒன்றைப் போட்டிருக்கின்றார்.

கனடாவில் சேர்த்த 21 கோடி ரூபாவை சுமந்திரன் கையாடல் செய்து விட்டார் என்ற சாரப்பட அபாண்டக் குற்றச்சாட்டுச் சுமத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் உட்பட நான்கு மகளிர் உறுப்பினர்களை உடனடியாகக் கட்சியிலிருந்து இடைநிறுத்தியும், அவர்களுக்கு எதிராக ஒழுங்கு விசாரணை நடவடிக்கைக்கு உத்தரவிட்டும் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா விரைந்து நடவடிக்கை எடுத்தமையை சிலாகித்து, மெச்சி, புகழ்ந்து தள்ளினார் சிறீதரன்.

*"இப்படி ஒரு தலைவரைத்தான் நாம் வேண்டி நின்றோம். ஒவ்வொரு விடயத்திலும் இவ்வாறு தலைவர் கடுமையான நடவடிக்கை எடுப்பாராயின் அவருக்கு முழு அளவில் பக்கபலமாகவும் முழு ஆதரவாகவும் நிற்பேன்.*

*"கட்சியின் சார்பில் இயங்கும் ஒரு பத்திரிகை மற்றும் முகநூலில் கட்சிப் பிரமுகர்கள் குறித்துக் கீழ்த்தரமான குறிப்புகளை எழுதிய கட்சி உறுப்பினர் ஒருவர் ஆகிய இரு தரப்புகள் குறித்து கட்சித் தலைவரிடம் எழுத்தில் முறைப்பாடுகள் கொடுத்துள்ளேன். அந்த முறைப்பாடுகள் தொடர்பிலும் கட்சித் தலைவர் இதேபோன்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுப்பாராயின் அவருக்குப் பின்னால் நாங்கள் உறுதியாக நிற்போம்.*

*"அந்த உறுதியை வேறு ஒரு விதத்திலும் நான் தெளிவுபடுத்திக் கூற விரும்புகிறேன்.*

*"அவர் அப்படி உறுதியான தலைவராகச் செயற்படுவாராயின் தப்பித் தவறி இந்தத் தேர்தலில் அவருக்கு ஏதும் பாதிப்பு – பின்னடைவு – வருமாயின் நான் எனக்குக் கிடைக்கும் வாய்ப்பை ராஜினாமாச் செய்து தலைவருக்கு விட்டுக் கொடுக்கவும் தயார் என்று இங்கு உறுதி கூறுகிறேன்."* – என அதிர்வேட்டைத் தூக்கிப் போட்டார் சிறீதரன்.

அந்தக் கூட்டத்தில், சுமந்திரனும் பேசினார்.

*"எனக்கு எதிராக அபாண்டமாகக் குற்றம் சுமத்தியவர்கள் மீது முழு அளவிலான சட்ட நடவடிக்கையைத் தீவிரமாக முன்னெடுப்பேன்.*

*"சக கட்சி உறுப்பினர் என்று பார்க்க வேண்டிய நெருக்கடி இல்லை. ஏனென்றால் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து சம்பந்தப்பட்டோர் இடை நிறுத்தப்பட்டு விட்டனர். அதற்கான கடிதம் செயலாளரினால் இன்று அனுப்பப்பட்டதாக அறிகிறேன்.*

*"கட்சியின் சக உறுப்பினர்கள் மட்டும் அல்ல, சக வேட்பாளர் எவரும் இப்படி அபாண்டமான – ஆதாரமற்ற – பொய்க் குற்றச்சாட்டுகளைப் பரப்பினால் அவர்களுக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பேன். அதற்கு நான் இனிப் பின்நிற்கமாட்டேன்."* – என்று அறிவித்தார் சுமந்திரன்.

மேற்படி ஆதாரமற்ற – அபாண்டமான – குற்றச்சாட்டுப் பரப்புவதற்கு இடமளித்து முக்கியத்துவம் கொடுத்த யாழ். ஊடக மையம், அது பற்றிய செய்திகளை அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்த ஒரு பத்திரிகை ஆகியவற்றுக்கும் சுமந்திரனிடமிருந்து Letter of demand – செல்லவிருப்பதாகத் தெரிகின்றது.

என்னைக் கேட்டால் இந்த விவகாரத்துக்காக ஊடக மையத்தை நோவதில் அர்த்தமில்லை.

வந்து கருத்து வெளியிடும் அரசியல் தரப்புகளின் பேச்சுக்கு எல்லாம் ஊடக மையமும் பொறுப்பேற்க வேண்டுமானால், அந்த மையத்தையே நடத்த முடியாமல் போய்விடும்.

சுமந்திரன் தரப்பு இது விடயத்தில் தமது முடிவை மீள்பரிசீலனை செய்வது நல்லது என்பது மூத்த ஊடகவியலாளர் என்ற முறையில் எனது கருத்து. என் பரிந்துரை ஏற்கப்பட்டால் மகிழ்வேன்.

– மின்னல் –

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் 44ஆவது அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் இலக்கு வைக்கப்படுவது குறித்து அவர் கவலை வெளியிட்டார்.

பல உலகநாடுகளில் சிறுபான்மையினத்தவர்களும், குடியேற்றவாசிகளும் அதிகளவு களங்கத்துக்கு ஆளாகின்றமை தொடர்பான தகவல்களால் கவலையடைந்துள்ளேன் என அவர் கூறியுள்ளார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் முஸ்லிம் சமூகத்தினர் கொரோனாவுடன் தொடர்புபடுத்தும் குரோதப் பேச்சுக்கள், களங்கப்படுத்தல்களால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அரச, தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அலுவலகங்கள் காலை 09.00 மணி முதல் மாலை 4.45 மணி வரையிலும், தனியார் துறை அலுவலகங்கள் காலை 09.45 மணி முதல் மாலை 06.45 மணி வரையிலும் இயங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரங்களில் மாற்றம் செய்வது குறித்து ஜனாதிபதியின் உத்தரவின் பேரில், நியமிக்கப்பட்ட குழுவினால் இந்தப் பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் பொதுத்துறை அலுவலகங்களின் ஆரம்ப மற்றும் முடிவு நேரம் தொடர்பான திருத்த பரிந்துரை அறிக்கை அமைச்சர் மஹிந்த அமரவீர விடம் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் காமினி செனவிரத்னவினால் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டது.

பரிந்துரைகள் பொது நிர்வாக அமைச்சு மற்றும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

## காணாமற்போனோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் கண்ணீருடன் நாம் எமக்கான நீதியை நாம் பெறுவதாயின் இலங்கையைச் சர்வதேச நீதிமன்றுக்குப் பாரப்படுத்து போன்ற கோரிக்கையை முன் வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கள் உறவுகளுக்கான நீதி சர்வதேச நீதியாகவே வழங்கப்படவேண்டும், சுமந்திரன், ஸ்ரீதரனை எதிர்க்கின்றோம், வடக்கு – கிழக்கில் தமிழருக்கு எதிராக நடத்தப்படும் இராணுவக் கெடுபிடிகளை உடன் நிறுத்து, இலங்கையில் போர்க் குற்றம் செய்தவர்களைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துங்கள், எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று உண்மையைச் சொல், வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் எங்கே, சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய் என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டு கண்ணீர் மல்கிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# தபால் மூல வாக்களிப்புக்கு விசேட தினம் அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 01

தபால் மூல வாக்களிப்பிற்காக ஜூலை 13 ஆம் திகதி விசேட தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய அனைத்து சுகாதார அலுவலர்கள் (எம்ஓஎச்), பொது சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் ஊழியர்கள் வாக்களிப்பதற்காகவே இந்தத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 1, 227 நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் உறவினர்கள் பதாகைகளை ஏந்தியவாறும் காணாமல் ஆக்கப்பட்ட தங்களது பிள்ளைகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## ராணுவத்தினரிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கருத்துக் கூறும்போது, அவர்கள் அனைவரும் புலிகளால் கொல்லப்பட்டு விட்டனர் என்ற பொறுப்பற்ற – உண்மைக்குப் புறம்பான பொய்யான விடயத்தை முன்வைத்தார்.

உண்மையில் 2009 முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின்போது சவேந்திர சில்வா தலைமையிலான 58 காலாட் படைப்பிரிவுதான் களத்தில் நின்றனர். அந்தவகையில் 2009 மே 16 ஆம் திகதி 2 மணியில் இருந்து 18 ஆம் திகதி வரை வட்டுவாகல் செல்வபுரம் பகுதியில் சரணடைந்த லட்சக்கணக்கான மக்களுள் பலர் ஆயிரக்கணக்கில் இன்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் என உறவுகளால் தேடப்படுகின்றனர்.

இவ்வாறு தேடப்படுபவர்கள் யுத்த களத்தில் இருந்து முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டில் இராணுவத்தினரிடம் பெற்றோர்களால், மனைவிமார்களினால், உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்கள்.

ஆகவே வட்டுவாகல் செல்வபுரம் பகுதியிலும், ஓமந்தைச் சோதனைச் சாவடியிலும் பல ஆயிரக்கணக்கில் சரணடைந்தும், கையளிக்கப்பட்டும் அழைத்துச் செல்லப்பட்டு இன்றுவரை அவர்கள் எங்கே உள்ளனர் எனத் தேடி அலையும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் பதில் என்ன? – என்றுள்ளது.

## சுற்றுலாத்துறையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது குறித்து நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்புவது குறித்து துறைசார் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சர்வதேச ஒத்துழைப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

## தீவிரவாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்தகைய தீவிரவாதிகள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படாமலிருப்பதை உறுதி செய்வதற்குப் பொதுமக்களின் ஆதரவு அவசியம் என்றும் கோரினார்.

அடுத்த 50 வருடங்களுக்கு நாடாளுமன்றத்துக்கு தீவிரவாதிகள் தெரிவு செய்யப்படாத நிலையை இந்த அரசு உருவாக்கும் என்றும் கெஹெலிய குறிப்பிட்டார்.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலாய் என அனைத்துச் சமூகங்களுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்று தெரிவித்த அவர், ஆனால் தீவிரவாதிகளுக்கு ஒருபோதும் இடமில்லை என்றும் கூறினார்.

## இலங்கையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் பேச்சாளர், இலங்கைப் பொருளாதாரத்தின் வெளிமட்டத் துறையை கவனத்தில் கொண்டு சார்க் மற்றும் ஏனைய இரு தரப்பு ஒப்பந்தங்களின் அடிப்படையில் பரஸ்பர பரிமாற்றல் மற்றும் இந்தியாவுக்கான இலங்கையின் கொடுப்பனவுகளை மீள ஒழுங்கமைத்தல் ஆகிய விடயங்களில் இரு நாடுகளும் மிகவும் நெருக்கமானதும் வினைத்திறன் மிக்கதுமான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையின் தேவைகள் தொடர்பான உத்தியோகபூர்வமான பேச்சுக்களை மேலும் துரிதப்படுத்துதல் தொடர்பாக இந்தியத் தூதுவர் நேற்றும் நேற்று முன் தினமும் கொழும்பில் உயர்மட்ட பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார்.

கொரோனா வைரஸிற்கு பின்னரான உலகில் பகிரப்பட்ட செழுமை மற்றும் நிலையான பொருளாதார மீட்சி ஆகியவற்றுக்காக இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவதற்கு இந்தியா தயாராக உள்ளது எனக் கூறப்பட்டது.

## அம்மானுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்கவேண்டும் என்றும், தனக்கு இழப்பீடாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமெனவும் மனுதாரரான பிக்கு கோரியுள்ளார்.

சட்டமா அதிபர், பதில் பொலிஸ்மா அதிபர், தேசிய புலனாய்வுப் பிரிவு இயக்குநர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அம்பாறை, அரந்தலாவைப் பகுதியில் மாமநபர்கள் நடத்திய தாக்குதலில் 31 பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 33 பேர் உயிரிழந்திருந்தனர். இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் மீது அரச தரப்பு குற்றம்சாட்டியது. ஆனால் புலிகள் இந்தத்தாக்குதலை உரிமைகோரவில்லை.

அரவந்தலாவைப் படுகொலைச் சம்பவத்துடன் கருணா அம்மானுக்கும் தொடர்பு உள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விக்கியின் தேர்தல் பரப்புரையில் பாடசாலை மாணவரின் 'பாண்ட்'?

## சர்ச்சையாகின்றது விவகாரம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 01

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் மல்லாகம், குழுமங்கால் தேர்தல் பரப்புரைக் கூட்ட வரவேற்பு நிகழ்வில் பயன்படுத்துவதற்கு 'பாண்ட்' இன்னிசைக் கருவிகளை வழங்கிய அதிபர் தொடர்பில் அமைச்சினால் விளக்கம் கோரப்பட்டுள்ள நிலையில் இந்த விடயம் மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்திற்கும் செல்கின்றது.

இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போது வரவேற்பிற்காக இன்னிசை அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. இந்த அணிவகுப்பிற்காக அருகில் உள்ள க.பொ.த. சாதாரணம் வரையான வகுப்புகளைக் கொண்ட் பாடசாலை ஒன்றின் மாணவர்களுடன் அப்பாடசாலை பாண்ட் கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஈ.பீ.டி.பியினால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயத்தை ஆராய்ந்த கல்வி அமைச்சு முறைப்பாட்டின் உண்மைத் தன்மையை ஆராய்ந்ததோடு இன்னிசை கருவிகளை வழங்கிய பாடசாலையின் அதிபரிடம் இருந்து விளக்கம் கோரியுள்ளது. இந்த நிலையில் இந்த விடயம் மேலும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

மேற்படி பாடசாலையில் க.பொ.த சாதாரணம் வரையிலேயே உள்ளது.

அந்தப் பின்புலத்தில் சிறுவர்களைத் தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபடுத்தியமை தவறானது என மீண்டும் தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுவதோடு மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிய வருகின்றது.

# அரசுக்குப் பூரண ஆதரவு வழங்கி உரிமைகளை வென்றெடுப்போம்

## முஸ்லிம் பிரமுகர்களுடனான சந்திப்பில் மர்ஜான் பளீல்

கொழும்பு, ஜூலை 01

முஸ்லிம் சமூகம் சுயமாக சிந்தித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கினாலே சமூகத்தின் உரிமைகளையும் தேவைகளையும் நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

களுத்துறை நகர சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இல்யாஸ் தலைமையில் முஸ்லிம் பிரமுகர்களுடனான சந்திப்பு களுத்துறையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் சமூகம் அரசியல் தலைவர்களால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடகுவைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் மீண்டு வெளியே வரவேண்டும். அப்போதுதான் எமது பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியும். முஸ்லிம் சமூகம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முழுமையான ஆதரவை ஐ.தே.கவுக்கு வழங்கிய போதிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச முஸ்லிம்கள் மீதுள்ள நம்பிக்கையால், தேசியப் பட்டியல் எம்.பியை எனக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி அலி ஸப்ரிக்கும் வழங்க முன்வந்துள்ளார்.

இதன் மூலமாக எமது மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இதுதான் பிரதமரின் எதிர்பார்ப்பு.



அதற்காக இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் ஜனாதிபதி தலைமையிலான அரசுக்குப் பூரண ஆதரவு வழங்க முன்வர வேண்டும்.

எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. எமது பாடசாலைகளில் பௌதீக வளப்பற்றாக்குறைகள் மற்றும் இன்னோரன்ன குறைபாடுகள் அதிகளவில் உள்ளன. இவைகளை நிவர்த்திக்க இந்தத் தேர்தலில் அதிகாரத்தைப் பெற்றுத்தாருங்கள்.

இதனையும் நாம் தவறவிடுவோமானால் எமது சமூகத்தின் எதிர்காலத்துக்கு நாமே தடையை ஏற்படுத்திய குற்றத்துக்கு ஆளாவோம். இதைச் சிந்தித்து எமது சமூகம் இத்தேர்தலில் செயற்பட வேண்டும்.

பெரும்பான்மை சமூகங்கள் கூட இன்று ஒற்றுமைப்பட்டுள்ள நிலையில், ஆட்சியிலுள்ள அரசுக்கு எமது சமூகமும் ஆதரவு வழங்குவதே காலத்தின் தேவையாகும் - என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவனம்! விபரீத விளையாட்டு!!

தேர்தல் என்று வந்ததும் பிய்த்து உதறப்படுபவையில் ஒன்று கட்சிகள், தரப்புகளின் கொள்கைகள் கோட்பாடுகள்தாம்.

அந்த வகையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்ரன் 'புதிய குண்டு' ஒன்றைத் தூக்கிப் போட்டிருக்கின்றார்.

'பல பேர் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்தார்' என்ற மாதிரி விக்னேஸ்வரனும் இந்தக் குதிரையில் ஏற முற்படுகின்றாரோ என்றொரு எண்ணம் ஓடியது.

மாறாக, பல பேர் குதிரை ஏற்றம் செய்து முடியாது தோல்வியடைந்த நிலையில் சிறுவனான அலெக்சாண்டர் ஏறி, அதில் இலாவகமாகச் சவாரி செய்ததைப் போல நீதியரசரும் இந்தக் குதிரையில் வெற்றிகரமாக சவாரி செய்வாரா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம்தான் அந்தக் குதிரை.

*"..... இலங்கைத் தமிழர்கள், தமிழர் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு தேசத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர மான, இறையாண்மையுடைய, மத சார்பற்ற சோசலிச தமிழீழ அரசு மீளப்பட்டு மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று தீமானிக்கின்றார்கள்"* என்பதே வட்டுக்கோட்டைத் தீர்மானம்.

1976 மே மாதம் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் தமிழிலும் என்ற தனி நாட்டுக்கான முடிவாகும். 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் தேசம் எங்கும் இந்தத் தீர்மானத்தை முன் நிறுத்திப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அதற்கான மக்கள் ஆணையையும் பெற்றுக் கொண்டது.

1976 மே தொடக்கம் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் தமிழரின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்படும் வரை இந்தக் கோரிக்கையை - வட்டுக் கோட்டைத் தீர்மான முடிவை - முன்நிறுத்தியே தமிழரின் அரசியல் நகர்ந்தது.

சுமார் 33 ஆண்டுகள் தான் கையில் எடுத்துப் பயணித்த இந்த தனிநாட்டுக்குக் கோரிக்கைப் பாதையை 2010 ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்தலில் மெல்லக் கைவிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

2010 பொதுத் தேர்தல், 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தல்கள், இரண்டு தடவைகள் உள்ளூராட்சித் தேர்தல்கள், இரண்டு தடவைகள் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள், 2015 பொதுத் தேர்தல் என்று இந்தத் தேர்தல்களில் எல்லாம் தமிழ்க் கூட்டமைப்பு மக்களிடம் பெற்ற ஆணை வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலிருந்து விலகியதாகும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் இலங்கைத் தீவில் தமிழர்கள் தனிநாடு - தனி இராச்சியம் - அமைப்பது பற்றி பேசுகின்றது.

ஆனால், கூட்டமைப்பின் இப்போதைய நிலைப்பாடு *"ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, பிளவுபடாத ஐக்கிய இலங்கைகுள் சமஷ்டித் தீர்வு ஒன்றை தமிழர் தேசத்துக்குக் காண்பது"* என்பதுதான்.

இந்தத் தேர்தல்களில் எல்லாம் அந்தத் தீர்மானத்துக்குத் தான் கூட்டமைப்பு ஆணை பெற்றது.

நீதியரசர் விக்னேஸ்வரன் கூட 2013 இல் அத்தகைய ஒரு கோரிக்கையை வலியுறுத்திய தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் நிறுத்தியே வட மாகாண முதல்வராகப் பெருவெற்றியீட்டினார்.

மக்கள் அளித்த ஆணைப்படியே - 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தல் விஞ்ஞாபன வாசகப்படியே - நடப்பேன் என்று அடிக்கடி கூறி வரும் விக்னேஸ்வரன், இப்போது அதையும் தாண்டி 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதை போல வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றிப் பேசத் தலைப்பட்டிருக்கின்றார்.

அதைக் கூடத் திட்டவட்டமான அறிவிப்பாக அவர் வெளியிடவில்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பற்றி நிற்போம் என்று அவர் உறுதியாக அறிவிக்கவில்லை. மாறாக, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கைவிடுவதாக நாம் இன்னும் அறிவிக்கவில்லை என்று பட்டும் படாமலும் அவர் கதை விட்டிருக்கின்றார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது - தனித் தமிழ்க் கோரிக்கை என்பது - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் *'இரு தேசம்; ஒரு நாடு'* என்ற கோரிக்கைக் கோட்பாட்டையும் கூடத் தாண்டிய தீவிரப் போக்கு நிலைப்பாடு.

அத்தகைய சுலோகங்களைக் கையில் எடுப்பதும், கையாள்வதும் மிக அவதானமாகவும், மதி நுட்பத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் செய்யப்பட வேண்டும்.

வாக்குத் திரட்டும் உசுப்போத்தலாக அதைப் பாவிப்பது விஷமத்தனமானது. பேராபத்தானது. விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடியது.

பட்டறிவுப் பாடங்களோடு அரசியல் தலைமைகள் செயற்பட வேண்டும். நீதியரசர் விக்னேஸ்வரன் தேர்ந்த அவதானத்துடன் இதைக் கையாள்வார் என நம்புகிறோம்.

# தேர்தலின் பின் அதிகாரத்தைக் கையில் எடுப்பேன் கோட்டாபயவிடம் இப்படிக் கூறினாராம் மஹிந்தர்



## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிடும் தகவல் இது

கொழும்பு,ஜூலை 01

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அதிகாரத்தைத் தான் கையில் எடுக்க போகிறார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூறியுள்ளார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவரை இடமாற்றம் செய்வது தொடர்பாக கலந்துரையாடலின் போதே மஹிந்த இதனைக் கூறினார் எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார். இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அந்த இடமாற்றத்தை செய்தார். அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நாமல் ராஜபக்ஷவின் நண்பர்.

நாமல் ராஜபக்ஷ இரவு நேர களியாட்ட விடுதிகளுக்கு செல்லும் போது அவருக்கு பாதுகாப்புக்காக செல்லும் நபர். தன்னை இடமாற்றம் செய்துள்ளனர் எனப் பொலிஸ் அதிகாரி, நாமலிடம் கூறியுள்ளார். நாமல் அதனை தனது தந்தையிடம் தெரிவித்துள்ளார். தந்தை, பாதுகாப்புச் செயலாளருக்கு கூறி இடமாற்றத்தை இரத்துச் செய்தார். எனினும் இடமாற்றத்தை அமுலாக்கி ஆக வேண்டும் என கோட்டாபய மீண்டும் கூறியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் அதனை அமுல்படுத்தினார். நாமல் மீண்டும் தந்தையிடம் கூறியுள்ளார். அவர் நேரடியாக ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றுள்ளார். மறுபுறம் பாதுகாப்புச் செயலாளரும் அங்கு வந்திருந்தார். முதலில் பாதுகாப்புச் செயலாளரிடம் சென்ற மஹிந்த, முதலில் எங்களுக்கு தேவையான வகையில் வேலை செய்ய தெரிந்து கொள் என தெரிவித்துள்ளார்.

இல்லாவிட்டால், கன்னத்தை உடைப்பேன் என்றும் எச்சரித்துள்ளார். பாதுகாப்புச் செயலாளர் நடுங்க ஆரம்பித்து விட்டார். அடுத்ததாக ஜனாதிபதி கோட்டாபயவிடம் சென்றுள்ளார். ஜனாதிபதி தலையைக் குனிந்து கொண்டிருந்தார்.

அங்கு சென்ற மஹிந்த நீ அந்த நாற்காலியில் அமர்ந்திருப்பதற்கு நானே காரணம் என கூறியுள்ளார். இது முற்றிலும் உண்மை. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடன் இருப்பவர்களே கோட்டாபயவை ஜனாதிபதி நாற்காலியில் அமர வைத்தனர்.

"பொதுத் தேர்தல் வரை காத்திரு, உனது 'வியத்மக' ஆள்களை நான் உதைத்து விரட்டுவேன்" எனப் பிரதமர், ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் உனது இராணுவக் குழுவையும் விரட்டி விடுவேன் என்று எச்சரித்துள்ளார். "தேர்தலுக்குப் பின்னர் நானே நாட்டை ஆட்சி செய்வேன், நீ பொம்மை போல இருக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

இதுதான் எதிர்காலத்தில் நடக்கும். அரசமைப்புச் சட்டத்திலும் அதிகமான அதிகாரங்கள் பிரதமருக்கே இருக்கின்றன என்பதே இதற்கு காரணம். மஹிந்த ராஜபக்ஷ கட்டாயம், கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு பொம்மை போல் வைத்திருப்பார்.

அதன் பிறகு மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் நாட்டை ஆட்சி செய்வார். அப்போது மீண்டும் எமது நாடு 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்கு முன்னர் இருந்த நிலைமைக்கு செல்லும்.- எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

# மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும்!

## அரசிடம் குணதாஸ வலியுறுத்து



மாகாண சபை முறைமையை முற்றாக நீக்கி அதிகாரப் பகிர்வு கோட்பாட்டை இல்லாது செய்யும் வகையிலேயே புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கையில் எடுக்கவேண்டும்.

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக தமிழ் அரசியல்வாதிகளால் விடுக்கப்பட்டுவரும் அறிவிப்புகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனைப் பயன்படுத்தி தனி ஈழத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கைகூடாத நிலையிலேயே புதிய அரசமைப்பின் ஊடாக அந்த இலக்கை அடைவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு பாடுபட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு அக்கட்சி முயற்சிக்கின்றது. எனவே, கூட்டமைப்பின் அணுகுமுறைகள் தொடர்பில் அரசு விழிப்பாகவே இருக்கவேண்டும்.

அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. மாகாண சபைகள் முறைமை நீக்கப்படவேண்டும் என கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. அதனை நானும் வரவேற்கின்றேன். புதிய அரசமைப்பின் ஊடாக இவ்விடயம் செய்யப்படவேண்டும். ஒற்றையாட்சியை பலப்படுத்தவேண்டும்.

அதேபோல் புதிய அரசமைப்பை உருவாக்கும் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் மாத்திரம் ஒப்படைக்காமல் புத்திஜீவிகளிடமும் அதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும். ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்தான் பணிகள் இடம்பெறவேண்டும். கடந்த ஆட்சியின்போது நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலேயே அரசமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது - என்றார்.

## 4 கிராம் ஹெரோயினுடன் யாழில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் பகுதியில் 4 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் பெரியகோவில் வீதிப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தப்படுவதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் இந்தக் கைதுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவரிடமிருந்து 4 கிராம் 680 மில்லிகிராம் பெறுமதியுடைய ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் கூட்டமைப்பு இம்முறை நான்கு ஆசனங்களை வென்றெடுக்கும்!

## அடித்துக் கூறுகின்றார் வேட்பாளர் கமலதாசன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை நான்கு ஆசனங்களை வென்றெடுத்தே தீரும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி ந.கமலதாசன் தெரிவித்தார்.

வாழைச்சேனை பேத்தாழையிலுள்ள தனது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் உரிமை தொடர்பான பிரச்சினை எழுந்தபோது, ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்கவே தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆயுத ரீதியான போராட்டத்தால் பெற முடியாததை, ஜனநாயக அரசியலால் பெற முடியும் என்பதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையாலே நானும் அரசியலில் களமிறங்கியுள்ளேன்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள மக்கள் பலத்தின் அடிப்படையில் இம்முறை நான்கு ஆசனங்களை வென்றெடுக்க முடியும். தமிழர்களின் அரசியல் பலம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதைத் தமிழர்கள் உணர்ந்துள்ளதால் நான்கு ஆசனங்களைப் பெறுமளவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று பலமடைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று கட்சிகளை ஒருங்கமைத்து உருவாக்கப்பட்ட கட்சியாகும். இதன் தலைமைகள் எடுக்கும் தீர்மானங்களுக்கு அனைவரும் கட்டுப்பட்டு நடப்பர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆட்சி அமைக்கக்கூடிய சூழல் ஏற்பட்டால் புதிய அரசமைப்பு தொடர்பில் பேச்சு நடத்தவும் எமது கட்சி தயாராகவுள்ளது – என்றார்.

# அதாவுல்லாவை மண்கவ்வ வைத்து சத்திய அரசியலை ஒழிக்க முயற்சி

## அவரே இப்படிக் கூறுகின்றார்

மக்களின் வறுமையைப் பயன்படுத்தி வாக்குகளைச் சூறையாட முயல்வதும், பொதிகளை வழங்கி ஏமாற்றுவதும் முஸ்லிம் சமூக அரசியலை மலினப்படுத்தும் செயல் என்று தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸின் பாலமுனை மத்திய குழுவினர் ஏற்பாடு செய்த தேர்தல் பிரசாரக் கூட்டம், பாலமுனை அமைப்பாளர் கே.எல். உபைதுல்லா தலைமையில் நடந்தது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அதாவுல்லா,

முஸ்லிம் சமூகத்தின் உரிமை, அபிவிருத்தி அரசியல் இன்று வெறும் உணவுப் பொதிகளுக்காக விலை பேசப்படுகின்றது.

மறைந்த பெருந்தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பால் எவ்வளவு பெரிய உயர்ந்த இலட்சியத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று திரும்புமிடம், தென்படும் பகுதியெல்லாம் 'கிப்லாவாக' (தொழும் திசை) நினைத்துக் கொண்டு செயற்படுகின்றது.

இது போதாது என்பதற்காக வன்னியிலிருந்து வந்த தலைமையும் எம்மை ஏமாற்ற வந்துள்ளதுதான் இன்றுள்ள கவலை.

உணவுப் பொதிகள், வாளிகள் தையல் இயந்திரங்களை வழங்கி எமது மக்களை இவர்கள் ஏமாற்றப் பார்க்கின்றனர். ஏழைகள் என்பதற்காக எமது தாய்மார்களை இவர்களால் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது.

ஆயிரம் ரூபா பொதிகளை வழங்கி,கோடி ரூபா பெறுமதியான எமது உரிமைகளையும் பாதுகாப்பையும் இத்தலைமைகள் தொலைத்து விட்டன. இது பெரும் குற்றமாகும். சத்தியத்தை அழிப்பதற்காக மயில் கட்சியினர் இன்று ஆயிரம் ரூபாக்களை வழங்கி வருகின்றனர். நல்லாட்சி அரசின் நாயகர்கள் என மார்பு தட்டித் திரிந்த இவர்கள், எமது மக்களின் வாக்குகளைக் காரணமில்லாமல் இல்லாதொழித்தனர்.

அதாவுல்லாவை இல்லாதொழிக்கவே, தங்கள் அதிகாரங்களை இவர்கள் பாவித்தனர்.அரசியலில் அதாவுல்லாவை ஒழித்து, சத்திய அரசியலை இல்லாமல் செய்யலாம் என இத்தலைவர்கள் கனவு காண்கின்றனர்

கடந்த நாடாளுமன்றத்திலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்றும் எத்தனை எம்.பிக்கள் இருந்தனர். அதிகாரத்தில் இருந்த அத்தனை பேரும் சாதித்தவைகள் என்ன? அமைச்சுப்



பதவிகளை வைத்துக்கொண்டே அவர்களால் சாதிக்க முடியவில்லை.

முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராகவும், நாட்டினுடைய இறைமைக்கு எதிராகவும், நாடாளுமன்றத்திலே எத்தனை முறை கைகளை உயர்த்தினர். விளையாட்டு அரசியல் செய்யும் முஸ்லிம் தலைமைகளை இத்தேர்தலுடன் வழியனுப்ப வேண்டும் – என்றார்

## கேப்பாப்பிலவில் இளைஞர் கைது!

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு கிராமத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் முள்ளியவளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவைச் சேர்ந்த நவரத்தினம் டிலக்சன் (வயது – 25) என்பவரே விசாரணைக்காக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மட்டு. நகரப் பகுதியில் மடக்கப்பட்டது முதலை

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பாலமீன்மடு பகுதியில் மக்களுக்கு அச்சுறுத்தல் செய்து வந்த முதலையொன்று அப்பகுதி மக்களினால் பிடிக்கப்பட்டது.

பாலமீன்மடு ஐந்தாம் குறுக்கு வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த நிலையிலேயே நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை இந்த முதலை பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 12அடி நீளமான இந்த முதலை நீண்ட நாள்களாக அப்பகுதி மக்களை அச்சுறுத்தி வந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முதலை தொடர்ச்சியாக அப்பகுதி மக்களை அச்சுறுத்தி வந்ததுடன் அப்பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்பாளர்களின் ஆடுகள், கோழிகள், நாய்களை பிடித்துச் சென்றிருந்ததாகவும் இது வரையில் 17க்கும் மேற்பட்ட ஆடுகளைக் குறித்த முதலை இழுத்துச் சென்றுள்ளதாகவும் அப்பகுதி



மக்கள் தெரிவித்தனர்.

தினமும் அச்ச நிலைமையின் மத்தியிலேயே ஆற்றுக்கு மீன்பிடிக்க செல்வதாகவும் கரையில் பதுங்கியிருந்து முதலை அச்சுறுத்தல் விடுத்து வந்தாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் சுரேஷ் தலைமையிலான குழுவினர் குறித்து முதலை அங்கிருந்து மீட்டுச்சென்றனர்.

# மகேந்திரன் குறித்து ரணில் பொறுப்புக்கூற வேண்டும்!

## சம்பிக்க வலியுறுத்து

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்பான பொறுப்பை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்க வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

ஆளுநராக மகேந்திரனை நியமிப்பதற்கு நாம் எதிர்ப்பு வெளியிட்டபோது தனிப்பட்ட ரீதியில் அவர் தொடர்பான பொறுப்பை முன்னாள் பிரதமர் ஏற்றார். எனவே, பொறுப்புக்கூறலிலிருந்து ரணில் தப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் உரையாற்றிய அவர்–

அர்ஜுன மகேந்திரனை நியமிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தார்.அதற்கு நானும் ராஜித சேனாரத்னவும் எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆனால், தான் அவர் தொடர்பான முழுப்பொறுப்பையும் ஏற்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறினார். 2015ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே பிணைமுறி மோசடி நடந்தது. விசாரணை நடத்துமாறு நாம் கோரினோம். ஆனால், எதுவும் செய்யாமல் ரணில் விக்கிரமசிங்க கேட்டு வாங்கிக் கொண்டார்.

2016 இல் அர்ஜுன மகேந்திரனின் பதவிக் காலம் முடிந்தபோது மீண்டும் நியமிக்க நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். திரும்பவும் மோசடி நடந்தது. ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து அவரை நியமிப்பதை நிறுத்தினோம் – என்றார்.

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 6655413

காலைக்கதிர்
Kalaikkathir

# நவம்பர் வரை நிவாரணம்!

## பிரதமர் மோடி அறிவிப்பு

கொரோனா காரணமான ஊரடங்கின் இரண்டாம் கட்டத் தளர்வுகள் ஆரம்பிக்கவுள்ள நிலையில், கரீப் கல்யாண் திட்டத்தின்கீழ், நவம்பர் மாதம் வரை மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

இதுகுறித்து மோடி மேலும் தெரிவிக்கையில், சரியான நேரத்தில் கொண்டுவரப்பட்டுள்ள ஊரடங்கால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் கொரோனாவால் உயிரிழப்புக் குறைவாக உள்ளது. பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது கொரோனாவை நமது நாடு சிறப்பாக எதிர்கொண்டுள்ளது. ஊரடங்கை மக்கள் பல இடங்களில் சரியாகப் பின்பற்றவில்லை. தளர்வுகளால் பலர் முகக் கவசம் அணியாமல் பொறுப்பற்ற முறையில் இருக்கிறார்கள். ஊரடங்கின் இரண்டாம் கட்டத் தளர்வுகள் தொடங்கியுள்ளன.

மழைக் காலம் தொடங்க உள்ள சூழலில் பொதுமக்கள் கவனமுடன் இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் சளி, காய்ச்சல் வரும் என்பதால் மக்கள் கவனத்துடன் இருக்க வேண்டும்.

ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டாலும், முன்பைவிட அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இப்போது



செய்யக் கூடிய சிறிய தவறுக்குக் கூட மிகப்பெரிய விலை கொடுக்க நேரிடலாம். கொரோனா விதிமீறலுக்காக ஒரு நாட்டின் பிரதமருக் குக் கூட அபராதம் விதிக்கப்பட்டதை பார்த்தோம்.

பிரதமர் முதல் சாதாரண மனிதர் வரை நமது நாட்டிலும் ஒரே விதிதான். சட்டத்தைவிட யாரும் உயர்ந்தவர்கள் இல்லை. அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும். நாட்டில் ஏழை மக்கள் யாரும் பசியால் வாடக்கூடாது.

இதற்காக அரசு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது. கரீப் கல்யாண் திட்டத்தின்கீழ், நவம்பர் மாதம் வரை மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். என்றார்.

## அடுத்த ஆண்டு சந்திரயான் - 3

சந்திரயான் - 3 விண்கலத்தை அடுத்த ஆண்டு விண்ணில் ஏவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இந்திய அணுசக்தி, விண்வெளித் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணமான ககன்யான்



கொரோனாத் தொற்றுக் காரணத்தால் நிறுத்தப்பட்டது என்றும் அதன் தயாரிப்புப் பணிகள் சரியான திசையில் சென்று கொண்டிருக்கின்றன என்றும் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

சந்திரயான் -3 விண்வெளிக் கலம் குறித்து ஜிதேந்திர சிங் கூறுகையில், இந்த விண்கலம் அடுத்த ஆண்டு செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியில் ஒரு லேண்டர், ரோவர் மற்றும் ஓர் உந்துவிசை அமைப்புத் தொகுதிகளை நிலவுக்குக் கொண்டு செல்ல உதவியாக இருக்கும், முந்தைய சுற்றுப்பாதை முழுமையாகச் செயற்படுவதால் அதற்குப் புதிய சுற்றுப்பாதை இருக்காது என்று தெரிவித்தார்.



**இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அசாமில் உள்ள மோரிகான் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மயோங் கிராமத்தில் பாதுகாப்பான இடத்தைத் தேடி கட்டுமரத்தில் அலைகின்றனர் ஏழைகள்.**

*நன்றி ரெய்டர்ஸ்.*

## எல்லையில் பீரங்கிகள் குவிப்பு!

லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் கடந்த மாதம் 15ஆம் திகதி சீனச் சிப்பாய்களுக்கும், இந்தியச் சிப்பாய்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலைப்பைத் தொடர்ந்து கல்வான் பகுதியில் சீனா தனது படைகளைக் குவித்துள்ள காட்சிகள் செயற்கைக் கோள் மூலமாகப் படமாக்கப்பட்டு வெளியாகின.

இந்த நிலையில் இந்தியா தனது சக்தி வாய்ந்த 'டி – 90 பீஷ்மா' பீரங்கிகளை எல்லையில் குவித்துள்ளது. துல்லியமான தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் இந்த பீரங்கி, ஒருநிமிடத்தில் 60 குண்டுகளைப் பொழியும் ஆற்றல் மிக்கது என்று இந்திய ஊடகங்கள் சுட்டிக் காட்டின. சீனா படைகளைக் குவித்ததைத் தொடர்ந்தே இந்தியாவும் படைகளைக் குவிக்கிறது என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



இந்தியா – சீனா இடையே சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதும் இருநாடுகளும் படைகளைக் குவித்த வண்ணம் உள்ளன.

## மனிதர்கள் மீது சோதனை ஆரம்பித்தது இந்தியா

இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைத் தன்னார்வலர்களுக்கு அளித்துப் பரிசோதனை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம் தன்னார்வலர்கள் பலருக்குக் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து அளித்து பரிசோதனை மேற்கொள்ளவுள்ளது.

இதே தடுப்பு மருந்தை விலங்குகளுக்குச் செலுத்திப் பரிசோதித்தபோது, அது பயனளிப்பதாகவும், கொரோனாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டுவதாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தன்னார்வலர்களுக்குச் செலுத்தப்பட்டுப் பரிசோதிக்கப்படவுள்ள இந்தத் தடுப்பு மருந்து உள்ளூர் ஆய்வு நிலையங்களில் பிரித்தெடுக்கப்பட்டு திறன் குறைக்கப்பட்ட வைரஸில் இருந்து உருவாக்கப்பட்டது.

தற்போது பரிசோதிக்கப்படவுள்ள இந்தத் தடுப்பு மருந்து



ஏற்கனவே நடத்தப்பட்ட பரிசோதனைகளில் பாதுகாப்பானதாகவும்நோய்எதிர்ப்புஎதிர்வினையைத் தூண்டுவதாகவும் இருந்ததாக அந்த நிறுவனம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாரத் பயோடெக் நிறுவனம் இரண்டு கட்டங்களாக இந்தத் தடுப்பு மருந்துகளைப் பரிசோதிக்க இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் அனுமதி அளித்துள்ளனர். இந்தத் தடுப்பு மருந்து கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க அல்லது கட்டுப்படுத்த உதவுகிறதா என்பதை விட, பாதுகாப்பானதா என்பதைத் தெரிந்து கொள்ளவே இந்த இரண்டு கட்டப் பரிசோதனைகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மூன்றாம் கட்டப் பேச்சு நடந்தும் எல்லைப் பதற்றம் குறையவில்லை

இந்தியா – சீனா இடையிலான எல்லைப் பிரச்சினை தொடர்பாக இவ்விரு நடுகளின் இராணுவ உயரதிகாரிகள் இடையியேயும் மூன்றாம் கட்டச் சுற்றுப் பேச்சு நடைபெற்றுவருகிறது. இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் மட்டத்திலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஒருமித்த முடிவு எட்டப்பட்டது.

எல்லையில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் இருந்து இருதரப்பும் படைகளைத் திரும்பப் பெறுவது எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி எல்லையில் படை விலக்கலுக்கான நடவடிக்கைகளை இருதரப்பும் மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகின. எனினும் இவ்விரு நாடுகளின் இராணுவத்தினரும் எல்லையில் குவிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் லடாக் மோதல் தொடர்பாக இராணுவ உயரதிகாரிகள் மட்டத்தில் மூன்றாம் சுற்று பேச்சு நேற்றுத் தொடங்கியது.

எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டுப் பகுதியில் உள்ள சுசூல் செக்டாரின் இந்திய பகுதிக்குள் இந்தப் பேச்சு நடந்தது. எல்லையில் பதற்றத்தைத் தணிப்பது குறித்தும், படைகள் விலக்கலுக்கான வழிமுறைகளை இறுதி செய்வது குறித்தும் இதன்போது ஆலோசனை நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.



# பாகிஸ்தானையடுத்து ஆப்கானிஸ்தான் கால்நடைச் சந்தையில் குண்டு வெடிப்பு

ஆப்கானிஸ்தானில் கால்நடைச் சந்தையில் நடந்த குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மெட் மாகாணம் சான்கின் மாவட்டத்தில் உள்ள கால்நடைச் சந்தையில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடந்தது.

அங்கு மக்கள் கூட்டம் நிரம்பியிருந்த நிலையில், திடீரெனக் குண்டுத் தாக்குதல் நடந்தது. இதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. அங்கு கரும்புகை மண்டலம் உருவானது. குண்டு வெடிப்பில் சிக்கி 10 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்புக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் தலிபான் ஆயுததாரிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஆப்கானிஸ்தான் அரசு குற்றம் சாட்டியுள்ளது.

இதை மறுக்கும் தலிபான்கள் ஆப்கானிஸ்தான் இராணுவமே இந்தக் குண்டுகளை வீசியது என்று தெரிவித்துள்ளனர்.



# சீனாவில் கொரோனாத் தடுப்பூசி இராணுவத்துக்கு செலுத்த முடிவு



கொரோனா வைரஸ் உருவாகிய சீனாவில் கொரோனாவுக்கு முதலாவது தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு அதை அந்த நாட்டு இராணுவச் சிப்பாய்களுக்கு ஏற்றிப் பரிசோதிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மத்திய இராணுவ ஆணையகம் அந்தத் தடுப்பூசியை இராணுவத்தினருக்குப் பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது. இந்தத் தடுப்பூசியை இராணுவ மருத்துவ அறிவியல் அக்கடமியின் ஒரு பகுதியான கன்சினோ மற்றும் பீஜிங் இன்ஸ்சிரியூட் ஒவ் பயோரெக்னோலஜி இணைந்து உருவாக்கியுள்ளன.

மேலதிக ஒப்புதல்கள் இல்லாமல் அதன் பயன்பாட்டை விரிவாக்க முடியாது. என்று தெரிவித்துள்ள சீன அரசு, சீனாவின் மகத்தான இராணுவப் படைகளுக்குள் இது பரவலாகப் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தது.

ஹொங்கொங்கில் பட்டியலிடப்பட்ட கேன்சினோ பயோ லாஜிக்ஸ் சோதனைகளில் இருந்து பெறப்பட்டுச் சீன இராணுவத்தில் பரிசோதிக்கப்படவுள்ள இந்தத் தடுப்பூசியில் 'நல்ல பாதுகாப்பு சுயவிவரம்' இருப்பதாகவும், கொரோனா வைரஸ் பரவலால் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் திறன் இருப்பதாகவும் சுட்டிகாட்டியே இந்தத் தடுப்பூசியை ஒரு வருடத்துக்குப் பயன்படுத்த சீனாவின் மத்திய இராணுவ ஆணையகம் அனுமதி அளித்துள்ளது. உலக சுகாதார அமைப்பு அடையாளம் கண்டுள்ள 17 முக்கிய தடுப்பூசிகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை சீனாவினுடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியாவுக்கு உதவ ஐ.நா. சபை முடிவு

சிரியாவில் நீடித்துவரும் ஆயுத மோதலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அகதிகளுக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன்வந்தது.

சிரியர்களுக்குப் பில்லியன் கணக்கான டொலர்கள் உதவி வழங்க அரசுகள் தயாராக உள்ளன, ஏனெனில் கொரோணாத் தாக்கம், உணவு விலை உயர்வு ஆகியவற்றால் அங்குள்ள மில்லியன் கணக்கான வர்களின் நிலை மோசமாகியுள்ளது என்று அண் மையில் ஐக்கிய நாடுகள் சபையில் நடந்த காணொலி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட அதிகாரியான கோரின் ஃப்ளீர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், சிரியாவில், 11 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன என்று ஐ.நா கூறுகிறது, அதே நேரத்தில் 6.6 மில்லியன் பேர் உலகின் மிகப்பெரிய அகதிகள் நெருக்கடியில் அயல் நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். பல சிரியர்கள் உணவு நெருக்கடியை எதிர்கொள்கின்றனர், 9.3 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்குப் போதுமான உணவு இல்லாத நிலையில், கொரோனா வைரஸ் பரவல் துரிதப்படக்கூடும் என்ற அச்சமுள்ளது என்றார்.

# பாம்பியோவுடனான பேச்சில் சமாதானம் எட்டப்பட்டது!

## தலிபான்கள் தெரிவிப்பு

கட்டாரின் தலைநகர் டோஹாவில் உள்ள தலிபான்களின் அரசியல் அலுவலகத்தின் தலைவராகச் செயற்பட்டு வருகின்ற அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் மைக் பாம்பியோ ஆப்கானிஸ்தான் சமாதான முன்னெடுப்புகள் குறித்து விவாதிப்பதற்காகக் காணொலி மாநாட்டை நடத்தினார். இது அமைதிக்கான பாதையில் உள்ள தடைகளை நீக்கும் அவரது முயற்சியாகக் காணப்பட்டது என்று தவிபான்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் சர்ச்சைக்குரிய கைதி இடமாற்றம் ஆகியவை இவ்விரு தரப்புகளுக்கும் இடையே மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கவிருந்த பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்தியிருந்த நிலையில் மைக் பாம்பியோவின் பேச்சில் சமாதான உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்துத் தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஈஹீன், முல்லா பரதர் மற்றும் பாம்பியோ இடையே நடந்த பேச்சுகளில் டோஹா ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, வெளிநாட்டு துருப்புக்களைத் திரும்பப் பெறுதல், அத்துடன் கைதிகளின் விடுதலை, ஆப்கானிஸ்தான் பேச்சுவார்த்தை மற்றும் சண்டைக் குறைப்புக் குறித்து விவாதிக்கப்பட்டதுஎன்றுமேலும்தெரிவிக்கப்பட்டது.



கென்யாவின் வடக்கு நகரமான லோத்வாரைச் சுற்றியுள்ள மரங்களிலுள்ள இலைகளை இளம் வெட்டுக்கிளிகள் தின்று தீர்த்தன. கென்யாவின் துர்கானா மாவட்டத்தின் லோட்வார் நகருக்கு அருகில் ஒரு தக்காளிப் பண்ணையை முழுதுமாக அழித்தது வெட்டுக்கிளிகள் படை.

# ஹொங்கொங் ஏற்றுமதியை நிறுத்தியது அமெரிக்கா!

ஹொங்கொங்கிற்கான பாதுகாப்பு உபகரணங்கள் ஏற்றுமதியை அமெரிக்கா முடிவுக்குக் கொண்டுவருகிறது என்று அமெரிக்காவின் வெளியுறவுத் துறைச் செயலர் மைக் பாம்பியோ தெரிவித்தார்.

ஹொங்கொங் தொடர்பாகத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதாகச் சீனா அறிவித்துள்ள நிலையில் அமெரிக்கா இந்த முடிவை எடுத்துள்ளது. இது குறித்து மைக் பாம்பியோ மேலும் தெரிவிக்கையில், ஹொங்கொங்குக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முக்கிய தொழில்நுட்பங்களை ஏற்றுமதி செய்வதை அமெரிக்கா தடை செய்யப்போகிறது. ஹொங்கொங்கை ஒரே நாடு, ஒரே அமைப்பு என்ற வரையறைக்குள் சீனா கருதினால், அமெரிக்காவும் அதைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்றார்.

சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சி ஹொங்கொங்கின் சுதந்திரத்தை முடிவுக்கு கொண்டுவர முடிவு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து, ட்ரம்ப் நிர்வாகமும் ஹொங்கொங் தொடர்பான தனது கொள்கைகளை மாற்றி அமைக்க முடிவு செய்துள்ளது.

# பிரான்ஸ் தேர்தலில் பிரதமருக்கு வெற்றி

பிரான்ஸில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அந்த நாட்டின் பிரதமர் எட்வர்ட் பிலிப் 58.5 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

அங்கு கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் கட்டமாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. 2ஆவது கட்டத் தேர்தல் மார்ச் மாதம் 22ஆம் திகதி நடைபெற இருந்த நிலையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் பிரான்சில் கொரோனா வைரஸ் பாதிப்பு குறைந்து வரும் நிலையில் ஒத்திவைக்கப்பட்ட 2ஆம் கட்டத் தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில் நார்மாண்டி பிராந்தியத்திலுள்ள லி ஹவ்ரே நகரில் அந்த நாட்டின் பிரதமர் எட்வர்ட் பிலிப் போட்டியிட்டார். இதில் அவர் 58.5 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் லி ஹவ்ரே நகரின் மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சிறீதரன் மீது வீசப்படும் கற்கள்

- இரா.துரைரத்தினம் -



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீது சில பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் குற்றச்சாட்டுக்களும், தூற்றுதல்களும் மலிந்து கிடக்கின்றன. அதற்கு மேல் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களால் கொலை அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருந்தன.

*'சுமந்திரன் துரோகி........சுட்டுக்கொல்ல வேண்டும்'* என்று முகநூல்களில் சிலர் வெளிப்படையாக எழுதி இருந்தமையையும் காணக் கூடியதாக இருந்தது.

சுமந்திரன் வழங்கும் செவ்விகள், பேச்சுக்களை தேடித் தேடி அதில் எங்கோ ஓர் இடத்திலாவது அவர் சொன்ன வார்த்தையை வைத்து அவர் துரோகி என தூற்றுபவர்களும் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் மேற்குலக நாடுகளில் இருக்கும் தமிழர்கள்.

நீண்ட காலமாக சுமந்திரனை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தி வந்த இந்த தரப்பு கடந்த ஒரு வார காலமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் பக்கம் திரும்பியிருக்கிறது.

சுமந்திரனுடன் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவது என சிறீதரன் முடிவெடுத்த வேளையிலிருந்து அவர் மீதான தாக்குதலுக்குத் தயார் நிலையில் இருந்தார்கள்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நடந்த தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பேசிய பேச்சு சிறீதரன் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கிறது.

இந்த தாக்குதலாளிகளால் சிறீதரன் மீது பின்வரும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன:-

சிங்கள தொலைக்காட்சி ஒன்றிற்கு சுமந்திரன் வழங்கிய செவ்வி தொடர்பாக சிறீதரன் கண்டனம் தெரிவிக்கவில்லை.

சுமந்திரனுடன் இணைந்து சிறீதரன் தேர்தல் பிரசாரம் செய்வது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் சுமந்திரனை இணைத்துப் பேசியது.

சுமந்திரன் போன்ற ஆளுமை உள்ளவர்கள் எமது கட்சிக்கும் எமது இனத்திற்கும் தேவை என சிறீதரன் பேசியது.

சுமந்திரனின் தொலைக்காட்சிச் செவ்வி தொடர்பாகக் கண்டனம் தெரிவிக்காமை சிறீதரனின் தனிமனித சுதந்திரம் சம்பந்தமானது. அந்தச் செவ்வியில் உள்ள சரி, பிழை பற்றி கட்சி பார்த்துக்கொள்ளட்டும். கட்சித் தலைமைப்பீடம் பார்க்க வேண்டிய வேலைக்குள் நாங்கள் தலைபோட முடியாது என்பது சிறீதரன் தரப்பு வாதம். அதையும் மீறி சுமந்திரன் மீது கண்டன அறிக்கை வெளியிடுமாறு சிறீதரனுக்கு யாரும் நெருக்குதல் கொடுக்க முடியாது. சிலர் அவ்வாறு நெருக்குதல்களைக் கொடுத்த போதிலும் சிறீதரன் அந்தப் பிரச்சினையிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

சுமந்திரனுடன் சேர்ந்து தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டாம் என சுமந்திரனுக்கு எதிரான தரப்புக்கள் மற்றும் சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்படும் தரப்புக்கள் வலியுறுத்தி இருந்த போதிலும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவும் சிறீதரனின் தனிமனித சுதந்திரம் சம்பந்தப்பட்டதுதான். ஒருவர் தான் வெற்றி பெறுவதற்கான வியூகத்தை அமைத்து செயற்படுவது வழமையான ஒன்றுதான். தான் யாருடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபட்டால் தனக்கு வெற்றி வாய்ப்பு இலகுவாகக் கிடைக்கும் என நம்புகிறாரோ அவருடன் இணைந்து செயற்படுவது தேர்தல் வியூகங்களில் ஒன்று. யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல, ஏனைய மாவட்டங்களிலும்



ஒரே கட்சியை சேர்ந்த இருவர் அல்லது மூவர் இணைந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றனர்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் சுமந்திரனை இணைத்து பேசிய விடயமே பெரும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது.

வடமராட்சிகிழக்கில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே சிறீதரன் இதனைக் கூறியிருந்தார்.

சிறீதரன் அக்கூட்டத்தில் பேசிய வீடியோவை நான் இரண்டு தடவைகள் கேட்டுப்பார்த்தேன்.

அந்த பேச்சின் சுருக்கம் இதுதான்:-

சமாதான காலத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றிற்கான சட்டவரைவைத் தயாரித்த போது கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் இருந்திருந்தால் பெரும் உதவியாக இருந்திருக்கும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் கூறியிருந்தார்.

சந்திரிக்கா அரசாங்க காலத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பங்கு அளப்பரியது. அவரது ஆளுமை ஆற்றல்களில் நாம் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தோம்.

அது போன்ற ஆளுமை மிக்க ஒருவர்தான் சுமந்திரன். தமிழ் மக்களுக்கு இவரைப் போன்ற பல ஆளுமை மிக்கவர்கள் வேண்டும். எங்கள் இனம் விடுதலை பெற வேண்டுமாக இருந்தால் சுமந்திரன் போன்ற ஆளுமைகளின் பங்களிப்பு அவசியமாகும்.

எமது இனம் தேசிய அடையாளத்துடன் இருக்க வேண்டுமாக இருந்தால் புத்திஜீவிகள் அறிவாளிகளின் இருப்பு அவசியமாகும்.

உணர்வு தளத்தில் இருப்பவர்கள், அறிவுதளத்தில் இருப்பவர்கள் எல்லோரின் அரசியலையும் இணைத்து எமது தின் உரிமைகளை வெல்ல வேண்டும். சர்வதேசத்தை வெல்ல வேண்டிய சூழலில் இருக்கின்றோம்.

நாங்கள் உண்மையைச்சொல்ல வேண்டும். மக் கள் தான் முடிவெடுப்பார்கள். - என்று அமைந்தது.

இந்தப் பேச்சே தமிழரசுக்கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்யும் தரப்பிற்கும் சுமந்திரனுக்கு எதிராக கொலைவெறியுடன் திரியும் மேற்குலக நாடுகளில் உள்ள சில தமிழர் தரப்பிற்கும் சிறீதரனுக்கு அடிப்பதற்கு சரியான பொல்லுக் கிடைத்தது போல் அமைந் தது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் ஒப்பிட்டு பேசுவதை தவிர்த்து இருந்தால் சிறீதரன் மீது இவ்வளவு தாக்குதல் இருந்திருக்காது. இவ்வாறான ஒப்பீடுகளை அவர் தவிர்த்திருக்க வேண்டும். சிறீதரன் மீது தாக்குதல் நடத்தக் காத்திருந்தவர்களுக்கு சரியான சந்தர்ப்பம் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் நாலாபுறமும் நின்று தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

சிறீதரனை பொறுத்தவரை 2010ஆம் ஆண்டிலும், 2015ஆம் ஆண்டிலும் விடுதலைப்புலிகளின் பெயரை பயன்படுத்தியே வாக்கு சேர்க்கும் உத்தியை கையாண்டு வந்தவர். சுமந்திரனை தவிர தமிழரசுக் கட்சியில் உள்ள ஏனைய வேட்பாளர்கள் சிலரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மற்றும் விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சியை சேர்ந்த வேட்பாளர்களும் விடுதலைப்புலிகளின் பெயரைச் சொல்லி வாக்கு கேட்பதில் மும்முரமாக உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தியாகத்தையும் பெயரையும் சொல்லி வாக்கு கேட்கும் போக்கு மாற வேண்டும். சிறீதரன் எதிர்காலத்தில் அதனை மாற்றிக்கொள்வார் என நம்புகிறேன்.

சுமந்திரன் மீது நியாயமான சில குற்றச்சாட்டுக்கள் உண்டு.

சம்பந்தனும் சுமந்திரனும் சேர்ந்து சர்வாதிகாரப் போக்கில் முடிவுகளை எடுக்கின்றமை.

கடந்த அரசாங்க காலத்தில் வரையறைகளையும் மீறி ரணில் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவை வழங்கியது.

ரணில் அரசாங்கத்திற்கு ஆதரவை வழங்கிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கைதிகள் விடுதலை உட் பட தமிழர் தரப்பின் சில எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறியமை.

கடந்த வேட்பாளர் தெரிவின் போது தலையீடுகளை செய்து குழப்பங்களை ஏற்படுத்தியமை. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் தெரிவின் போது மாவட்ட வேட்பாளர் தெரிவுக்குழுவின் தீர்மானத்தை கணக்கில் எடுக்காது தனது செல்வாக்கில் வேட்பாளர் ஒருவரை சுமந்திரன் நியமிக்க முற்பட்டமை.

- இவை நியாயமான ஏற்றுக்கொள்ளக் கூடிய குற்றச்சாட்டுக்கள்.

இது தவிர புலம்பெயர் சில தமிழர் தரப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் எழுந்தமானத்திற்கு வழங்கும் 'துரோகி' பட்டங்கள் பற்றி அவர்களிடம்தான் விளக்கம் கேட்க வேண்டும்.

நான்காவது விடயம் - சுமந்திரன் போன்ற ஆளுமை மிக்கவர்கள் எமது கட்சிக்கும் எமது இனத்திற்கும் தேவை என சிறிதரன் பேசியது.

சுமந்திரன் போன்ற ஆளுமை மிக்கவர்கள் எமது கட்சிக்கும் எமது இனத்திற்கும் தேவை என சிறீதரன் 2020 இல் பேசிய பேச்சைத்தான் 2015ஆம் ஆண்டு மாவை சேனாதிராசா யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று பேசியிருந்தார். 2015 இல் மாவை பேசியதை 2020ல் சிறீதரன் பேசியிருக்கிறார்.

தமிழரசுக்கட்சி தலைவர் மாவை சேனாதிராசா 2015 இல் சுமந்திரன் போன்ற ஆளுமை மிக்கவர்கள் எமது கட்சிக்கும் இனத்திற்கும் தேவை என பேசியதற்கு பல காரணங்கள் உண்டு.

அவற்றில் முக்கியமான சில காரணங்களை இங்கே தருகிறேன்.

13ஆவது திருத்தசட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 15க்கு மேற்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளிடமிருந்து பறித்தெடுத்து பஸில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு முற்பட்டது. திவிநெகும (வாழ்வின் எழுச்சித்திட்டம்) என இத்திட்டத்திற்கு பெயரிடப்பட்டிருந்தது.

மாகாணசபைக்கு இருக்கும் அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் இத்திட்டத்தை எதிர்த்து மாவை சேனாதிராசாவின் பெயரில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.

அந்த வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் 9 மாகாணங்களில் அனைத்து மாகாணங்களிடமும் தனித்தனியாக சம்மதம் பெற வேண்டும், ஒரு மாகாணம் எதிர்த்தால் கூட எதிர்த்தால் அதனை நடைமுறைப்படுத்த முடியாது என நீதிமன்றம் தெரிவித்தது.

கிழக்கு மாகாணம் உட்பட 8 மாகாணங்களும் மாகாணசபைகளின் அதிகாரங்களை பறித்தெடுப்பதற்கு சம்மதம் எனத் தீர்மானங்களை நிறைவேற்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# போதையில் லைசென்ஸ் இன்றி கார் ஓடிச் சிக்கிய சட்டத்தரணி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக மதுபோதையுடன் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தெல்லிப்பளை பொலிஸாரால் இன்று வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

தெல்லிப்பளை பொலிஸ் பிரிவில் வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த போது, கார் ஒன்றை வழிமறித்துள்ளனர்.

எனினும் அந்தக் கார் நிறுத்தாது சென்றதால் சந்தேகம் கொண்ட பொலிஸார், அதனை பின்தொடர்ந்து சென்று வழிமறித்தனர்.

அந்தக் காரைச் செலுத்திச் சென்றவர், தன்னை சட்டத்தரணி என்று பொலிஸாருக்கு அறிமுகம் செய்தார். எனினும் அவர் மதுபோதையில் இருப்பதை முகத்தோற்றமளவில் அறிந்துகொண்ட பொலிஸார், சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கோரியுள்ளனர்.

இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரமும் அந்த இளம் சட்டத்தரணியிடம் இருக்கவில்லை. அதனால் அவர் மீது வழக்குப் பதிவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இன்று சட்டத்தரணிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவர் முற்படுத்தப்படவுள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக விடுதிகளுக்கு இன்று முதல் மாணவர்கள் அனுமதி!

## தொற்று நீக்கல் பணிகள் நேற்றுப் பூர்த்தி!





யாழ்ப்பாணம், ஜூலை 01

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ள இறுதி யாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகளுக்குத் தோற்றும் விடுதி மாணவர்கள் இன்று முதல் விடுதிகளுக்கு மீள அனுமதிக்கப்படவுள்ளனர். விடுதிகளில் மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக நேற்று பல்கலைக்கழகத்தின் அனைத்து விடுதிகளும் இராணுவத்தினரால் தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் ஆரம்பித்தவுடன் - கடந்த மார்ச் 13 ஆம் திகதி முதல் - நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையுடன், விடுதிகளில் தங்கியிருந்த அனைத்து மாணவர்களும் வீடுகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அதன் பின் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளை கடந்த மாதத்தின் இறுதி வாரத்தில் இருந்து மெல்ல, மெல்ல வழமைக்குக் கொண்டு வருவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் நாட்டிலுள்ள அனைத்து மருத்துவ பீடங்களிலும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகின. அடுத்த கட்டமாக ஏனைய பீடங்களைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்களுக்கும் பரீட்சைகளைக் கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நடாத்தி முடிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழங்களைக் கேட்டிருந்தது.

அதற்கமைய யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவர்கள் அடுத்த வாரம் முதல் அனுமதிக்கப்படவுள்ளனர். பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்தப்படும் வெளி மாவட்ட மாணவர்களுக்கு வசதியாக இன்று முதல் மாணவர்கள் விடுதிகளுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் பிரிவின் உதவிப் பதிவாளர் எஸ்.ஐங்கரன் தெரிவித்தார்.

விடுதிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு முன்னராக விடுதிகளைத் தொற்று நீக்கும் பணியில் இராணுவத்தினர் நேற்று ஈடுபட்டனர். 511 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கேணல் ரத்னாயக்கா தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அனைத்து விடுதிகளும் நேற்று தொற்று நீக்கி விசிறப்பட்டது. (ம)

# வடக்கில் 21 பேர் ரி.ஐ.டியால் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாணத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சத்தம் சந்தடியில்லாமல் இதுவரை 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 7 பேரும், முல்லைத்தீவில் நேற்று முன்தினம் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் காலத்தில் நடைபெறும் இந்தக் கைதுகள் மக்கள் மத்தியில் பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

எமக்குப் 13 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன. கிளிநொச்சியிலிருந்து 12 முறைப்பாடுகளும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு முறைப்பாடும் கிடைத்துள்ளன. கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் கிளிநொச்சியிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகத்தில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர். அவர்களை நாம் நேரில் பார்வையிட்டோம். சிலர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றார்கள் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், ஜெயபுரம், வன்னேரிப் பகுதிகளைச் சேர்ந்த 7 பேர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு கேப்பாப்பிலவைச் சேர்ந்த இளைஞர் ஒருவனும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் இந்தத் திடீர் கைதுகள் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# கொழும்பு மாநகர சபையில் உள்ள ஐ.தே.கவினர் ரணிலுடன் பேச்சு

ரணில் விக்ரமசிங்க மற்றும் கொழும்பு மாநகர சபையின் ஐ.தே.க. உறுப்பினர்களுக்கிடையில் நேற்று சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

கொரோனாத் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு துரித நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இதன் போது ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனாநாயக்கவுக்கு ஆலோசனை வழங்கினார்.

முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான வரி நீக்கம் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு வழங்கப்படும் கட்டணத்தை நீக்குதல் என்பன குறித்தும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை வெற்றி பெறச் செய்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்று ரோசி சேனாநாயக்க உள்ளிட்ட கொழும்பு மாநகர சபையின் ஐ.தே.க. உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு உறுதியளித்தனர்.

தமிழர் தேசத்திற்கு வருகை தரும் சஜித் பிரேமதாச அவர்களை வரவேற்கின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தி

கௌரவ சஜித் பிரேமதாஸ அவர்களின்
யாழ் மாவட்டத்திற்கான மக்கள் சந்திப்புக்கள்



| | | |
|---|---|---|
| 01.07.2020 – புதன்கிழமை | | |
| 2.00 - 2.45 | சாவகச்சேரி | கலாச்சார மண்டபம் |
| 3.30 - 4.15 | நல்லூர் யாழ்ப்பாணம் | இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி |
| 4.30 - 5.15 | கோப்பாய் | பொன் செல்வா மஹால் நீர்வேலி |
| 5.30 - 5.45 | தாவடி | வேதவிநாயகர் விளையாட்டுக் கழகம் |
| 02.07.2020 – வியாழக்கிழமை | | |
| 8.45 - 9.30 | வட்டுகோட்டை | வடக்கம்பரை அம்மன் கோவில் திருமண மண்டபம் |
| 9.45 - 10.30 | மானிப்பாய் | பிரதேசசபை பொது மண்டபம் |
| 10.45 - 11.00 | சாவற்காடு | மகாத்மா சமூக மையம் |
| 11.30 - 12.15 | காங்கேசன்துறை | இராஜேஸ்வரி மண்டபம் |
| 2.15 - 3.00 | உடுப்பிட்டி தொகுதி | சித்தி விநாயகர் திருமண மண்டபம் |
| 3.10 - 3.20 | இராஜகிராமம் | கரவைச்சுடர் விளையாட்டுக் கழகம் |
| 3.30 - 4.15 | பருத்தித்துறை | தேவாலய பொது மண்டபம் |
| 5.00 - 5.45 | ஊர்காவற்றுறை | அனுசா திருமண மண்டபம் |
| 03.07.2020 – வெள்ளிக்கிழமை | | |
| 9.00 - 9.45 | கிளிநொச்சி | கூட்டுறவு மண்டபம் |



சஜித் பிரேமதாஸ
ஐக்கிய மக்கள் சக்தி

X 2

அ.கிருபாகரன்
கிருபா லேணர்ஸ் அதிபர்

# ஐ.தே.கவினர் பெரமுன பக்கம் பாய்ந்தனராம்

ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளனர் என மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். நாவலப்பிட்டியவில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்றிய தினம் 300 பேர் வரையில் பச்சைநிறத் தொப்பி அணிந்து ஊடக சந்திப்பை நடத்திவிட்டு மஹிந்தானந்த அளுத்கமகேயுடன் கைகோர்த்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தொப்பியை அணிந்து அவருக்கு ஆதரவளித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் கங்கே இஹல பிரதேச சபைத் தலைவர், பஸ்பாகை கோரளை தலைவர், நாவலப்பிட்டி நகர சபை எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பிரதேச, நகர சபை உறுப்பினர் தங்களின் ஆதரவினை வழங்கியுள்ளனர் எனக் கூறப்பட்டது.

# தம்பலகாமம் விபத்தில் கடற்படைச் சிப்பாய் பலி

(எவ்.முபாரக்)

திருகோணமலை, ஜூலை 01

திருகோணமலை தம்பலகாமம் 99ஆம் கட்டை சந்தியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் கடற்படை வீரர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் சம்பூர் கடற்படை முகாமில் படை வீரராகப் பணிபுரியும் விக்கிரம திலக (வயது - 31) என்பவராவர்.

இவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த உழவு இயந்திரத்தில் நேருக்கு நேர் மோதுண்டதில் உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவிக்கின்றனர். சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உழவு இயந்திர சாரதி கைது செய்யப்பட்டுள்ளமையுடன் சந்தேக நபரை இன்றைய தினம்கந்தளாய் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளமையோடு தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.





# சிறீதரன் மீது வீசப்படும்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணசபையில் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட பிள்ளையான் முதலமைச்சராக இருந்தமையால் மாகாணத்தின் அதிகாரத்தை பறித்தெடுக்கும் திட்டத்திற்கு சம்மதம் வழங்கினார்.

வடமாகாணம் மட்டும் ஆளுநர் நிர்வாகத்தில் இருந்தது. வடமாகாண ஆளுநரிடம் அதற்கான சம்மதத்தை பெற்ற போது அதனை ஆட்சேபித்து மீண்டும் ஒரு வழக்கை மாவை சேனாதிராசாவின் பெயரில் உயர்நீதிமன்றில் சுமந்திரன் தாக்கல் செய்தார். அந்த வழக்கின் தீர்ப்பும் தமிழர் தரப்பிற்கு வெற்றியாக அமைந்த போது உடனடியாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவியிலிருந்து நீக்கினார் ஜனாதிபதி. பிரதம நீதியரசரை நீக்கிய விடயம் சர்வதேச அரங்கில் சிறிலங்கா அரசு பலத்த கண்டத்திற்கு உள்ளாகியது.

இலங்கையில் நீதித்துறையில் மஹிந்த அரசு தலையீடு செய்கிறது என ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல நாடுகள் இலங்கை மீது கண்டனங்களைத் தெரிவித்தன. இலங்கை அரசை நெருக்கடிக்குள் தள்ளிய ஒரு வழக்காக அது அமைந்தது.

சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்திருந்த நிலங்களை விடுவிக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட ஒருவரான மாவை சேனாதிராசா உட்பட பொதுமக்கள் சிலரின் பெயரில் உயர்நீதிமன்றில் சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்தார். பொதுமக்களின் நிலங்களிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது. இந்த தீர்ப்பை தொடர்ந்தே 3 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

தமிழரசுக்கட்சியின் பெயரில் சமஷ்டி என்ற பெயர் இருக்கிறது. அக்கட்சி தனிநாடு கோருகிறது. எனவே அக்கட்சியை தடை செய்ய வேண்டும் என சிங்கள பேரினவாத அமைப்பு ஒன்று உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது. கட்சித்தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் துரைராசசிங்கம் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் தமிழரசுக்கட்சி சார்பாக சட்டத்தரணி சுமந்திரன் ஆஜரானார். சமஷ்டியை கோருவதற்கு தமிழர்களுக்கு உரிமை உண்டு என உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 2017ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கினர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக புதிய அரசியல் யாப்பு ஒன்றை தயாரிக்கும் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்தது. இந்த யாப்பை தயாரிப்பதில் தமிழர்கள் சார்பில் முக்கிய பங்கை வகித்தவர் சட்டத்தரணி சுமந்திரன் ஆவார். இந்த யாப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாவிட்டாலும் அதிகார பகிர்வுக்கு எடுக்கப்பட்ட நல்ல முயற்சியாகக் கருதப்படுகிறது.

கடந்த அரசாங்க காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் முக்கியமானது 19 ஆவது திருத்த சட்டமாகும். நிறைவேற்று அதிகார முறையை வலுவிழக்க செய்து சுதந்திர ஆணைக்குழுக்கள் மூலம் முக்கிய நிர்வாக கட்டமைப்பை நிர்வாகிப்பதே இந்த 19ஆவது திருத்த சட்ட மூலமாகும். இந்த ஆணைக்குழுக்களில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளும் இடம்பெறும் வகையில் இச்சட்ட மூலம் தயாரிக்கப்பட்டது. இதனை தயாரிப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களாவர். 19ஆவது திருத்த சட்டத்தில் சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்பு ஓரளவு உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் தான் கோட்டாபய அரசு 19ஆவது திருத்த சட்டத்தை நீக்க வேண்டும் எனக் கோரி வருகிறது.

கன்னியா வெந்நீர் ஊற்று, உட்பட தமிழர் நலன் சார்ந்த 20க்கு மேற்பட்ட சட்டத்துறை சார்ந்த நடவடிக்கைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டமையை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

இந்த விடயங்களை ஆளுமை உள்ள ஒருவரால்தான் செய்ய முடியும். சட்டத்துறை சம்பந்தமான இந்த விடயங்களை சுமந்திரனை தவிர 13நாடாளுமன்ற உறுப்பினர்களில் வேறு யாரால் இதனை செய்திருக்க முடியும்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளியே தமிழர் தரப்பில் பல சட்டத்தரணிகள் இருக்கிறார்கள். அவர்களில் யார் இந்த விடயங்களை செய்வதற்கு முன்வந்தார்கள்? யாரும் இந்த விடயங்களை செய்ய முன்வராததாலேயே சுமந்திரன் கட்சிக்குள்ளும் வெளியிலும் முதன்மைப்படுத்தப்பட்டார்.

இதனால்தான் 2015ஆம் ஆண்டு மாவை சேனாதிராசா அவர்கள் சுமந்திரன் போன்ற ஆளுமை மிக்கவர்கள் எமது கட்சிக்கும் இனத்திற்கும் தேவை என மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

தமிழ் மக்கள் ஓரளவுக்கு நீதித்துறையைத்தான் நம்பி இருக்க வேண்டி இருக்கிறது. நிறைவேற்று அதிகார (ஜனாதிபதி) துறை தமிழர் நலன்களில் அக்கறை கொண்டதல்ல.

எனவே தமிழர்களுக்கு நெருக்கடிகள் வருகின்ற போது நீதித்துறையை நாட வேண்டிய நிலையில் தமிழர்கள் இருக்கிறார்கள்.

ஆளுமை மிக்கவர்களை ஓரம் கட்டிவிட்டு அமெரிக்க தேர்தலில் கிளாரி வெல்ல வேண்டும் என நல்லூர் கோவிலில் ஆயிரம் தேங்காய் உடைப்பவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?

சுமந்திரன் மட்டுமல்ல சுமந்திரனை போன்ற பல ஆளுமைகள் தமிழர்கள் மத்தியில் தேவை. இதனை தானே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறினார். இதில் என்ன தவறு இருக்கிறது?

# மோ. சைக்கிளில் கொழுவியிருந்த கைப்பையுடன் பணம்,நகை மாயம்

## கொக்குவில் மேற்கில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 01

கொக்குவில் மேற்குப் பகுதியில் மோட்டார சைக்கிளில் கைப் பையில் இருந்த ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் ஒன்றரைப் பவுண் மோதிரம் என்பவற்றை நேற்றைய தினம் சில நிமிடங்களில் திருடன் களவாடிச் சென்றுள்ளான்.

கொக்குவில் மேற்கு , ஆனைக் கோட்டை வீதியில் கேணியடியை அண்டிய பகுதியில் வசிக்கும் - தனியார் காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்றும் - குடும்ப பெண்மணி ஒருவர் நேற்றுக் காலை 8 மணியளவில் பணிக்கு புறப்பட்ட சமயம் தனது கைப் பையை மோட்டார் சைக்கிளில் கொழுவிய நிலையில் வீதியில் இறங்கிய போதே ஆவணத்தை எடுக்கவில்லை என்ற ஞாபகம் வந்திருக்கின்றது. அதையடுத்து வீதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டின் உள்ளே ஆவணத்தை எடுத்து வருவதற்காக சென்று சில நிமிடங்களில் ஆவணத்தை எடுத்துத் திரும்பி வந்துள்ளார்.

இவ்வாறு ஆவணத்தை எடுத்து வந்தவர் மோட்டார் சைக்கிளில் இருந்த கைப் பையைக் காணாது பதறி வீதியால் பயணித்தவர்களை விசாரித்துக் கைப்பையைத் தேடியிருக்கின்றார். கைப் பை கிடைக்கவில்லை. அந்தப் பையில் ரொக்கப்பணமாக ஒரு லட்சம் ரூபாவுடன் மோதிரமும் இருந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் முறையிடப் பட்டுள்ளதோடு அப் பகுதியில் இருக்கும் மறைகாணி ( சீ.சீ.ரி.வி. கமரா ) மூலம் தேடும் பணிகள் இடம்பெறுகின்றன என அறிய வந்தது.

# முன்னாள் அமைச்சர்கள் கையளிக்காத வாகனங்களைக் கைப்பற்ற நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தகவல்



கொழும்பு, ஜூலை 01

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் திருப்பி அனுப்பப்படாத 05 க்கும் மேற்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களை உடனடியாக கைப்பற்ற இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்த வாகனங்கள் மார்ச் 02 ஆம் திகதியே கையளிக்க வேண்டியிருந்தபோதும், இன்னும் சில முன்னாள் எம்.பி.க்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் அவற்றைக் கையளிக்கத் தவறிவிட்டனர் எனக் கூறினார். தற்போது இராஜாங்க அமைச்சர்கள் பதவியில் இல்லாதமையால், அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வ வாகனங்களை அவர்கள் மீண்டும் கையளித்திருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்ட பின்னர், அவை சட்டத்தை மீறிப் பயன்படுத்தப்பட்டமை நிரூபிக்கப்பட்டால், தேர்தலைத் தொடர்ந்து அந்த அரசியல்வாதிகள் தங்கள் ஆசனங்களை இழக்க வாய்ப்பு உள்ளது என்றும் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார்.

# மட்டக்களப்பு மாவட்ட நெல் அறுவடை விழா






மட்டக்களப்பு, ஜுலை 01

சிறுபோக நெல் அறுவடை மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பகுதிளிலும் தற்போது சிறப்பாக இடம்பெற்று வருகிறது. அரசு வழங்கிய உரமானியம் மற்றும் உள்ளீடுகளைக் கொண்டு உற்பத்திசெய்த நெல் உற்பத்தி இவ்வருடம் திருப்திகர மான விளைச்சலை தந்திருப்பதாக மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக் கின்றனர்.

இதற்கிணங்க விவசாய அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டுதலில் இந்த மாவட்ட நெல் அறுவடையைச் சம்பிரதாய பூர்வ மாக ஆரம்பித்து வைக்கும் மாவட்ட அரச நெல் அறுவடை விழா நேற்று கிரான் கமநலச் சேவைப் பிரிவின் முள்ளிப்பொத் தானை கண்டத்தின் பூலாக்காடு பகுதி யில் கமநல சேவைகள் திணைக்களத் தின் ஏற்பாட்டில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கமநல அபிவிருத்தி திணைக்களத் தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணை யாளர் கி. ஜெகநாத் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, கமநல அபிவிருத்தி திணைக்கள ஆனையாளர் நாயகம் டபிள்யு. எம். எம். பி. வீரசேகர ஆகியோர் கலந்து கொண்டு சமய அனுஸ்டானங்க ளுடன் இந்து மக்களின் பாரம்பரிய முறைப்படி அறுவடையை சம்பிரதாயபூர்வ மாக ஆரம்பித்த வைத்தனர்.

இந் நிகழ்வில் ஏழை விவசாய குடும் பங்களுக்கு நிவாரணப் பொதிகளும் ஏழை விவசாயிகளின் பிள்ளைகளுக்கு புல மைப் பரிசில் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.

# காணி மோசடியைத் தடுப்பதற்கு 'ஈ-லாண்ட்' பதிவைத் துரிதப்படுத்த ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜுலை 01

காணிப் பதிவின்போது இடம்பெறும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் பதிவு பொறி முறைமையை துரிதப்படுத்துவதற்கும் ஈ – காணி (இலத்திரனியல் முறைமை) பதிவை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத் தார்.

காணிப் பதிவின்போது இடம்பெறும் மோசடிகள் மற்றும் தாமதங்கள் காரண மாக பொதுமக்கள் பல அசௌகரியங் களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

காணி ஆணையாளர் திணைக்களம், காணி உரித்துகள் நிர்ணய நிறுவனம், நில அளவைத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களம் ஒன் றிணைந்த வகையில் ஈ – காணி (இலத்தி ரனியல் முறைமை) பதிவு செய்யும் நட வடிக்கையை துரிதப்படுத்துவதன் முக்கி யத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஈ – காணி (இலத்திரனியல் முறைமை) பதிவு செய்தல் நடவடிக்கை தொடர்பாக நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவல கத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டது.

காணிப் பதிவுசார் நிறுவனங்களை ஒன்றிணைப்பதன் அவசியத்தை ஜனாதி பதி சுட்டிக்காட்டினார்.

வனஜீவராசிகள், வன பாதுகாப்பு மற் றும் சுற்றாடல் அமைச்சையும் ஒன்றி ணைத்து குழுவொன்றை நியமித்து இவ்வேலைத்திட்டத்தை துரிதப்படுத்து மாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

ஈ – காணி (இலத்திரனியல் முறைமை) பதிவின் ஊடாக உறுதிப்பத்திரம், காணி பொழிப்பு அறிக்கை கணனிமயப்படுத் தப்படும். பொழிப்பு அறிக்கை பெற்றுக் கொள்ளும்போது கணினிமயப்படுத்தப் பட்ட ஆவணத்தை வழங்குவதற்கும் சட்டத் தரணிகளுக்கு, பத்திரத்துறை பதிவா ளர்களுக்கு மற்றும் எந்தவொரு நபருக்கு அல்லது அரச நிறுவனத்திற்கு இணை யம் மூலம் காணி பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இதன்மூலம் காணி மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமென அதி காரிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழி நுட்ப முகவர் நிலையத்துடன் ஒன்றி ணைந்து ஓகஸ்ட் மாதமளவில் இவ்வேலைத் திட்டத்தை மக்கள்மயப்படுத்த எதிர்பார்க் கப்படுகின்றது. இவ்வாறு ஈ – காணி (இலத் திரனியல் முறைமை)யின் கீழ் பதிவு செய் யும் காணிகளுக்கு இலத்திரனியல் கணக்குப் புத்தகம் ஒன்றையும் வழங்கு வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# அம்பாறை விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை மேற்கொள்வதற்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில், கல்முனை, நற்பிட்டிமுனை பகுதியிலுள்ள சுமார் 13 கண்டங்களிலும் உள்ள வயல் நிலங்களில் நீர் வழிந்தோட முடியாத நிலையில் நீர் தேங்கிக் காணப்படுகின் றன.

இதனால் 15,000 ஏக்கருக்கு மேற் பட்ட நெற் காணிகளில் அறுவடைசெய்ய முடியாத துர்பாக்கிய நிலைக்கு விவசாயி கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வை பெற்றுத்தர வேண்டும் இல்லையெனில் தாம் தீக்குளிக்கவும் தயாராக இருக்கின்றனர் எனத் தெரிவித்து, கல்முனை பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் நேற்று ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களை அறுவடை செய்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களப்பு முகத்துவாரத்தை வெட்டி, நீரோடுவதற்கு வழி அமைத்து தரவேண்டுமெனக் கோஷம் எழுப்பியவாறு, கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, குறித்த பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதாக அரசாங்க அதிபர் உறுதி வழங்கியதை அடுத்து, பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கி ருந்து கலைந்து சென்றனர்.

# கொரோனா வைரஸ் இரண்டாவது அலை குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 01

கொரோனா வைரஸின் இரண்டாவது அலை குறித்து உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள எச்சரிக்கையின் தீவி ரத்தன்மை தொடர்பாக பரிசீலிக்க வேண் டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது

இந்த விடயம் தொடர்பாக நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய சங்கத்தி ன் தலைவர் சேனல் பெர்னாண்டோ, கொரோனா வைரஸின் இரண்டாவது அலைகளைத் தடுக்க குறைந்தபட்சம் 68,000 சோதனைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்று தேசிய தொற்று நோயியல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிலையில் நாட்டில் கொரோனா வின் இரண்டாவது அலையைத் தடுக்க சுகாதாரத் துறையினருக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி செய லணி மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளரை அவர் கேட்டுள்ளார்.

# திரையரங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்

திரையரங்குகளில் திரைப்படங்களை காட்சிப்படுத்தும் போது தேர்தல் பிரச்சார விளம்பரங்களை காட்சிப்படுத்தக் கூடாது எனப் பதில் பொலிஸ்மா அதிபர் திரை யரங்க உரிமையாளர்களுக்கு அறிவுறுத் தியுள்ளார்.

அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர் களின் பிரச்சார விளம்பரங்களுக்காக திரைப்படங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழுவால் தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் பொலிஸ் தலைமையகத் திற்கு அறிவித்துள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, திரையரங்குகளில் திரைப் பட ஆரம்பத்தின் போது அல்லது திரைப் படத்திற்கு இடையில் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களின் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படுதல் தேர்தல் குற்றம் என்பதால் நாட்டின் அனைத்து திரையரங்க உரிமையாளர்களுக்கும் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

திரையரங்குகளில் இவ்வாறான செயற் பாடுகள் இடம்பெறுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிக்க நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்

# முரளியை கௌரவித்து நிகழ்வு




21 ஆம் நூற்றாண்டின் பெறுமதியான கிரிக்கெட் வீரராக பெயரிடப்பட்டுள்ள இலங்கை அணியின் முன் னாள் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு விசேட கௌரவிப்பு நிகழ் வொன்று நடத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா பிரதேசத் தில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

உலகின் பிரபல கிரிக் கெட் இதழான 'விஸ்டன் கிரிகெட் இதழ்' 21 ஆம் நூற் றாண்டின் சிறந்த கிரிக்கட் வீரர்கள் 30 பேரின் பெயர்களைக் கடந்த தினம் வெளியியிட்டது.

இதில் 21 ஆம் நூற் றாண்டின் பெறுமதியான டெஸ்ட் கிரிக்கெட் வீரராக இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பெயரிடப் பட்டிருந்தார்.

முரளிதரனுக்குகிடைத்த குறித்த அங்கீகாரத்தைக் கொண்டாடுவதற்காக நேற்று முன்தினம் நுவ ரெலியாவில் அமைந் துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் அவருக்கு மற் றும் அவரின் குடும்பத்தி னரை கௌரவிக்கும் முக மாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வேலையாள்கள் தேவை
Ice Packet, யோக்கட், Cup Juice (பால் உற்பத்தி சம்பந்தமான) தொழில் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(முல்லைத்தீவு மாவட்டம்)
KST Distributor 077 153 1167

காலைக்கதிர் Kalaikkathir

# பிரபாகரனைத் தாம் சந்தித்தமையை நினைவு கூர்கின்றார் மனோ கணேசன்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் முன்னர் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தனது முகநூல் பக்கம் கீழ்வருமாறு பதிவிட்டுள்ளார்.

அன்றைய ஜனாதிபதி சந்திரிக்காவின் “சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு நான் தயார். நீங்கள் தயாரா?”, “தென்னிலங்கை பெரும்பான்மை கட்சிகளின் கட்சி அரசியல் சண்டைகளை கணக்கில் எடுக்க வேண்டாம்!”, “யார் என்னை நாடி வந்தாலும் அடைக்கலம் தருவேன்!” ஆகிய செய்திகளை எடுத்துக்கொண்டு தூதுவனாக நான், எனது கட்சி தூது குழுவுடன், கொழும்பிலிருந்து அதிகாலையில் கிளம்பி காலையில் கிளிநொச்சி சென்றடைந்தேன்.

சமாதான செயலகத்தில், என்னை வரவேற்ற தமிழ்செல்வன் அங்கே இருக்கும் விருந்தினர் இல்லத்தில் எம்மைத் தங்கும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ் செல்வனை அந்த சமாதான செயலகத்தில் இரண்டு முறை அதற்கு முன்னரே நான் சந்தித்திருந்த காரணத்தினாலே நானும், தமிழ் செல்வனும் நல்ல அரசியல் நண்பர்களாக மாறியிருந்தோம்.

சிறிது நேரத்திற்கு பிறகு அங்கே கிளிநொச்சியிலேயே இருந்த மற்றுமொரு விருந்தினர் இல்லத்திற்கு புலிகள் எம்மை அழைத்து சென்றார்கள். அங்கு புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்தார்.

அன்றுதான் நானும், பிரபாகரனும் முதல் முதலாக சந்தித்துக்கொண்டோம். என்னை கண்டவுடன், சிரித்தபடி, கைலாகு கொடுத்து, தோளை தொட்டு வரவேற்றார். அமர்ந்து பேச தொடங்கினோம்.

அங்கே புலிகளின் தலைவருடன் தமிழ்ச்செல்வன், பொட்டு அம்மான், நடேசன், புலித்தேவன் போன்ற ஏனைய புலி பிரமுகர்களும் இருந்தார்கள்.

பிரபாவை அடுத்து, அங்கே என் பார்வையை கவர்ந்தவர், பொட்டு அம்மான். எனக்கு ஞாபகம் இருக்கும் வரையில், அவர் சிவந்த நிறத்தில்,உயரமாக, அடர்ந்த கறுத்த மீசையுடன் ஒரு மலையாள சினிமா நடிகர் மாதிரி தோற்றமளித்தார்.

சந்திரிகாவின் செய்தியை நான் பிரபாகரனிடம் கூறினேன்.

“நோர்வேயை நானே இலங்கைக்கு கூட்டி வந்தேன். எனவே தொடர்ந்து பேசத் தயார். பேச விரும்புகிறேன். கொழும்பு கட்சி அரசியலை கணக்கில் எடுக்க வேண்டாம். இதை பிரதானமாக உங்களிடம் சொல்ல சொன்னார்” என்றேன்.

“சந்திரிகா பேசுவதானால் பேசலாம். சண்டை இடுவதானாலும் சண்டை இடலாம்.” என சிரித்தபடி பிரபாகரன் பதில் சொன்னார்.

மேலும், “கொழும்பில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசியல்



விளையாட்டுகள் பற்றி எனக்கு அக்கறை கிடையாது. ரணிலும், சந்திரிகாவும் எனக்கு ஒன்றுதான். இதை அவரிடம் சொல்லுங்கள்” என்று பிரபாகரன் என்னிடம் கூறினார்.

மேலும், “நோர்வேயை அவர் கூட்டி வந்து இருக்கலாம். ஆனால்,நாங்கள் பேச வேண்டுமே. இல்லாவிட்டால் நோர்வேக்கு வேலை கிடையாது.” என்று சொல்லி சிரித்தார்.

அச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் நிகழ்ந்தது. சந்திப்பின் போது பிரபாகரன் அதிகமாக வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தார். நகைச்சுவையாகப் பல விடயங்களைப் பேசினார்.

அதுவரை அவரைப்பற்றி, அவர் ஒரு கடினமான மனிதராக இருக்க கூடும் என நினைத்திருந்தேன். அன்று கடினத்துக்கு அப்பால், அவருக்கு நகைச்சுவை உணர்வும் நிறைய இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டேன்.

நானும் அதே மாதிரி நகைச்சுவை உணர்வாளன் என்ற காரணத்தினாலே இருவரும் பேச வந்த விடயத்தை விட்டுவிட்டு நிறைய வேறு விடயங்களை பற்றியும் பேசி சிரித்தோம்.

அங்கு இன்னொன்றையும் கவனித்தேன். பிரபாகரனின் இரு புறமும் அமர்ந்திருத்த ஏனைய புலிப் பிரமுகர்கள் தாமாக எதுவும் பேசவில்லை.

நானும், பிரபாகரனும் பேசி சிரிப்பதை கண்டு அவர்களும் சத்தமில்லாமல் சிரித்துக்கொண்டார்கள். அதற்கு மேல் பிரபாகரன் ஏதாவது அவர்களிடம் கேட்டால் மாத்திரம் பதில் கூறினார்கள்.

என் தந்தையின் சினிமா பற்றி இடையில் பேசினார். எனது தந்தையின் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்களை தான் விருப்பத்துடன் பார்த்திருப்பதாகவும், நமது நாட்டு தமிழர்களின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் தமிழ் சினிமாவை கட்டியெழுப்ப பாடுபட்டவர் என்ற முறையிலே அவர் மீது தனக்கு மிகுந்த மரியாதை இருப்பதாகவும் பிரபாகரன் என்னிடம் கூறினார்.

அடுத்து அவர் கூறியது எனக்கு மகிழ்ச்சியான ஆச்சரியம் அளித்தது.



“ஸ்ரீலங்காவுக்கு வந்த நடிகர் சிவாஜி கணேசனுடன், உங்கள் தந்தை இலங்கை தமிழ் சினிமாவின் சார்பில் சச்சரவு பட்டதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது” என்றார்.

தமிழக சினிமா மீதும், தமிழகக் கதை, நாவல் இலக்கியம் மீதும் தனக்கு இருக்கும் அதீத பற்றை சுருக்கமாக சொல்லிவிட்டு, “ஆனால்,நமக்கென்று மண்வாசனை இருக்கிறதல்லவா? அது ஒட்டுமொத்த உலக தமிழுலகில் தனித்துவ அங்கம் அல்லவா?” என்றார்.

எனது கருத்தும் அதே என்றேன். என் தந்தையின் கருத்தும் அதே என்றேன்.

கருணா அம்மான் பற்றி சந்திரிகா கூறியதையும் நான் பிரபாகரனிடம் கூறினேன். “கருணா அம்மான் வெளியில் வந்தால் அவருக்கு அடைக்கலம் தருவேன். அதை உங்களுக்கு எதிரானதாக எடுத்துக்கொள்ள கூடாது என்று சந்திரிகா கூறுகிறார்”

“அதெப்படி..? அது, எங்களுக்கு எதிரான செயற்பாடுதான் என்று சந்திரிகாவிடம் சொல்லுங்கள்” என காரசாரமான விடயத்தை சிரித்தபடியே சொன்னார்.

அடுத்த விடயத்தை நான் சொல்ல விரும்பி இருக்கவில்லை. ஆனாலும், ஒரு தூதுவன் என்ற முறையில் நேர்மை இருக்கவேண்டுமே. ஆகவே சொன்னேன்.

“அதைபோல் நீங்கள் அவரிடம் வந்தாலும் கூட உங்களையும் வரவேற்று அடைக்கலம் தந்து ஏற்றுக்கொள்வார் என சந்திரிகா கூறினார்” ஒரு வினாடியும் தாமதியாமல் பதில் வந்தது.

“நான் ஒரு போதும் அப்படி அங்கே வந்து அடைக்கலம் கோர மாட்டேன். அதற்கான அவசியமும் ஏற்படாது என சந்திரிகாவிடம் கூறுங்கள்.” என பிரபாகரன், இப்போது சிரிக்காமல் சொன்னார்.

அதற்கு பிறகு மீண்டும் சிரிக்க, சிரிக்க நகைச்சுவையாக பேசினார். கருணா அம்மானை பற்றி பேசினார்.

“கருணா இப்போது கொழும்பிலேதான் ஒளிந்து இருக்கின்றார் என எங்களுக்கு தெரியும். அவர் எங்கு இருக்கிறார் என்பது ஜனாதிபதி சந்திரிகாவிற்கு தெரியாதா? என்ன&? ரணிலிடம் கேட்க சொல்லுங்கள். ரணிலுக்கு தெரியும் என்பது எங்களுக்கு தெரியும். அவர் கருணாவுக்கு ஏற்கனவே அடைக்கலம் கொடுத்து விட்டார்” என்று மீண்டும் சிரிப்புடன் பிரபாகரன் பேசத் தொடங்கினார்.

அப்புறம் ரணிலை பற்றி பேச்சு ஆரம்பமாகியது. “எப்படி இருக்கின்றார் உங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க?” என்று கண்ணை இமைத்தபடி கேட்டார்.

“அவர் கருணா அம்மானை எங்கே ஒளித்து வைத்திருக்கின்றார் என்றும், அவர் எப்படி கொழும்புக்கு வந்தார் என்றும் எங்களுக்கு தெரியும்” என்று சொல்லி நிறுத்தி விட்டு, யாரவன்(ர்)..? என தன் உதவியாளர்கள் பக்கம் திரும்பி கேட்டார். “மௌலானா” என்று யாரோ பதில் கூறினார்கள். எங்களுக்கு தெரியும் என அவரிடம் கூறுங்கள். என்றார்.

“நான் இங்கே வரும் பொழுது ரணில் வெளிநாடு போய்விட்டார். உங்களை சந்திப்பது பற்றி அவருக்கு நான் அறிவிக்கவும் இல்லை. இன்னும் சில தினங்களில் கொழும்பு திரும்பி விடுவார். வந்தவுடன் கட்டாயமாக நீங்கள் சொன்னதை அவரிடம் சொல்கிறேன்.” என்று நான் பிரபாகரனிடம் கூறினேன்.

இன்னும் கொஞ்சம் நேரம் பேசிக் கொண்டு இருந்தோம். கொழும்பு அரசியலை பற்றி மேலோட்டமாக பேசினோம். அவர் எந்த இடத்திலும் “இலங்கை அரசாங்கம்” என்ற வார்த்தைகளை பயன்படுத்த வில்லை. “சிங்கள அரசாங்கம் என்றே திரும்ப, திரும்ப கூறினார். மலையக மக்கள் பற்றி, தமிழர் ஐக்கி யம் பற்றி, சாதாரண சிங்கள மக்கள் பற்றிய தனது நல்லெண்ணத்தை பற்றியும் பேசினார். பேசினோம். அத்துடன் இச்சந்திப்பு முடிந்தது.

அதுதான் அவருடனான கடைசி சந்திப்பு என நான் அப்போது நினைத்திருக்கவில்லை. ஒரு சமாதான அரசியல் தீர்வு வந்து விடும். அதன் பின் இலங்கை அரசியல் பரப்பில் அவர் ஒரு தீர்மானக்கரமான அரசியல் பாத்திரம் வகிக்க போகின்றார் என நான் அப்போது எண்ணினேன்.

இதன் பிறகு நான் ஒருநாளும் தமிழீழ விடுதலை புலிகள் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரனை சந்திக்கவே இல்லை.

அன்று என்னைப்போல கிளிநொச்சிக்கு வந்திருந்த ஆறுமுகன் தலைமையிலான இ.தொ.கா. குழுவும், சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி குழுவும், பிரபாகரன் தலைமையிலான புலிகள் குழுவினரை சந்தித்ததாக நான் அறிந்துகொண்டேன். தயா மாஸ்டர் அதை எனக்கு அப்போது கூறினார்.

ஆனால் நாங்கள் தங்கியிருந்த இடத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கவில்லை. நாங்கள் சந்தித்த சந்தர்ப்பத்திலும் அவர்களை நாம் காணவில்லை.

# யாழ் நகரத்தில் விக்கி அணி பரப்புரை





யாழ்ப்பாண நகரத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினர் அதன் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2020 இல் வெளியிடப்பெற்றது.